
சிந்திக்கத் தெரிந்த சிங்கம்



பாபநாசம் குறள்பித்தன்

சிந்திக்கத் தெரிந்த சிங்கம்

தமிழக அரசின் சிறுவர் இலக்கியத்திற்கான
சிறப்பு விருது பெற்ற

பாபநாசம் குறள்பித்தன்



புதிய இலக்கு புதிய தடம்

நிவேதிதா பதிப்பகம்

இலக்கம். 1, 3-வது மாடி, புதூர் 13-வது தெரு,
அசோக் நகர், சென்னை - 600 083.
போன்: 2371 3725, 98416 21398

SINTHIKKATH THERINTHA SINGAM

by

BAPANASAM KURAL PITTHAN

Rs. 40.00

First Edition - 2007

Published by
NIVETHITHA PATHIPPAGAM
No.1, 3rd Floor,
Pudhur 13th Street, Ashok Nagar,
Chennai - 600 083.
Ph: 2371 9010

Laser by
STAR GRAPHICS
T.Nagar, Chennai - 600 017.

Wrapper Designed by
S.N.RAJA

Printed at
J M Process
Chennai - 600 005.

நகங்களை வெட்டுங்கள் நம்பிக்கையை வெட்டாதீர்கள்!

இனிய குழந்தைகளுக்கும், அறிவார்ந்த சான்றோர் களுக்கும் வாழ்த்தும், வணக்கமும். ஒரு குழந்தையின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டுமானால் அவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டியது புத்தகமும், படிக்க வைத்தலுமே. அப்போதே அவர்கள் வாழ்க்கை உயிரோட்டமாக அமைந்து விடும். அவர்களுக்குத் தேவையான செல்வங்களையும், சிறப்புகளையும் அவர்கள் தேடிக் கொள்வார்கள். நாடிக் கொள் வார்கள். இது உண்மை. சத்தியம். வளர்ந்த நாடுகளை எல்லாம் உற்றுப் பார்த்தால் அவர்கள் குழந்தைகளுக்கு மூலதனமாக இதைத்தான் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக அறியலாம். குழந்தைகளின் பிற்காலத்திற்கு என்று பொருளாதாரத்தைப் பெருக்கி வைத்து அவர்களை சோம்பேறிகளாக ஆக்கிவிட வேண்டாம்.

கல்வி, உழைப்பு, முயற்சி, நம்பிக்கை இந்த நான்கை யும் அவர்களின் முன் நிறுத்துவோம். அவர்கள் முன்னேறி விடுவார்கள். பாலையும், தேனையும்

மகிழ்ந்து ஊட்டும் நாம் குழந்தைகளுக்குக் கல்வியை யும் ஊட்டுவோம். உண்ணவும், உடுக்கவும் கற்றுக் கொடுக்கும் குழந்தைக்கு, உழைக்கவும் கற்றுக் கொடுப்போம். குழந்தையின் நகம் வளர்ந்தால் வெட்டுவோம். அவர்களது நம்பிக்கையை வெட்டி விட வேண்டாம். அவர்கள் முயற்சிக்கு முட்டுக் கட்டையாக என்றும் நாம் நிற்க வேண்டாம். அவர் களை சுதந்திரமாக விடுவோம். வீட்டுத் தொட்டியில் விதைகளை நடவேண்டாம். விளை நிலங்களில் விதைப்போம். அப்போதுதான் அவை வெளிச்சத் தோடு விருச்சமாகும். காக்கா ஏமாந்து வடையை இழந்த கதையை இனியும் நாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டாம். கூடு கட்ட, தூக்கணாங்குருவி உழைக்கும் உழைப்பின் நுண்ணறிவைச் சொல்லு வோம்.

அக்கம் பக்கத்து வீட்டு வீணான பேச்சையெல்லாம் அவர்களிடம் பேசாமல், அந்நிய நாட்டின் அறிவியல் வளர்ச்சியைப் பற்றியும், நம் நாட்டு முன்னேற்றத்தைப் பற்றியும் பேசுவோம்.

ஒழுக்கத்தையும், சுற்றுப்புறத் தூய்மையைப் பற்றி யும் அவர்களுக்கு சுட்டிக் காட்டுவோம். வீணாக தொலைக்காட்சியைக் காட்டி குழந்தைகளின் மூளையில் நாம் முடிச்சுப் போட்டு விட வேண்டாம். அறிவியல் மேன்மையையும், அன்பையும், ஒற்றுமை யையும் ஒவ்வொரு நாளும் கற்றுக் கொடுப்போம். இயற்கையாக அவர்களை வாழ விடுவோம்.

வழக்கம்போல் இந்நூலில் சிறுவர்களுக்காக நல்ல நீதிக்கதைகளை எழுதியிருந்தேன். குழந்தைகளுக்கு இதன் வழியே நல்லது விளைந்தால்... நல்லது. எனக்கு நம்பிக்கையுண்டு நல்லது நடக்குமென்று.

இந்த முயற்சிக்கு துணை நின்ற பதிப்பக உரிமையாளர் திருமதி. தேவகி இராமலிங்கம் அவர்களுக்கும் என் முயற்சியிலும், வளர்ச்சியிலும் மகிழ்ச்சியடைகின்ற திரு. டாக்டர் பி.ஆர்.எம்.எம். சாந்தகுமார் அவர்களுக்கும், எப்போதும்போல் என் எழுத்திற்கும், இதயத்திற்கும் துணை நிற்கின்ற துணை மயில் நீலா கண்ணன் அவர்களுக்கும் என் வணக்கமும், நன்றியும்.

நட்புடன்,

பாபநாசம் குறள்பித்தன்

16/52, பக்தவச்சலம் காலனி முதல் தெரு,
வடபழனி, சென்னை - 600 026.

பொருளடக்கம்

1.	பாட்டி தந்த பால்	7
2.	அப்பா அது தப்பு!	16
3.	தாத்தா சொத்து...	23
4.	சிங்கமும் முயலும்!	30
5.	பூவரசன்	39
6.	அப்பாவுக்கு காலுண்டு!	48
7.	டி..வி. வேண்டாம்ப்பா!	54
8.	தங்கத்தாமரை!	58
9.	கலா கலா கல கலா!...	72
10.	சிந்திக்கத் தெரிந்த சிங்கம்	78
11.	ஒரு ஆடும் இரண்டு நரியும்	88
12.	வனஜா!...	93
13.	குரங்கின் யோசனை	105
14.	ப(ா)டம்	117
15.	எங்களின் தோழன்!	125

☆☆☆

சிந்திக்கத் தெரிந்த சிங்கம்

1. பாட்டி தந்த பால்

மூன்றாவது முறையாக முகுந்தனை அவன் தாய் நீலா கூப்பிட்டாள்.

''மு''முகுந்த்! அப்பா வர்ற நேரமாயிடுச்சு... போய் பால் வாங்கிட்டு வந்துடுப்பா...''

''நான் போகமாட்டேன். அக்காளைப் போய் வாங்கிகிட்டு வரச் சொல்லு.'' என்று தெருவில் கோலி விளையாடிக் கொண்டிருந்த முகுந்தன் சொன்னான்.

''அக்கா மாவு ஆட்டிகிட்டு இருக்காப்பா. இன்னைக்கு மட்டும் நீ போயிட்டு வாடா...'' என்று கெஞ்சினாள்.

''கொஞ்ச நேரம் விளையாட விட மாட்டீங்களே... சரி சொம்பக் கொண்டு வாங்க...'' என்று சொல்லி விட்டு மீண்டும் ஆடத் தொடங்கினான்.

உள்ளே சென்ற முகுந்தனின் தாய் செம்போடு வந்தாள்.

''டே, ராமு நான் போயிட்டு உடனே ஓடி வந்துடு றேன். நீ வேற யாரையும் விளையாட சேர்க்காம இங்கேயே இரு...'' என்று தன் தோழனிடம் கூறிவிட்டு

மூடி போட்ட பால் செம்பை தன் தாயிடம் வாங்கிக் கொண்டு பால் வாங்க பாட்டி வீட்டை நோக்கி ஓடினான்.

◆

முகுந்தன் ஆறாவது படிக்கிறான். அவன் அக்காள் வாணி ப்ளஸ்டூ படிக்கிறாள். மிக அமைதியானவள். முகுந்தனோ அவளுக்கு எதிர்.

பிள்ளைகளிடம் வம்படிப்பது. எப்போதும் விளையாடுவது; இப்படித்தான் முகுந்தன் இருப்பான்.

முகுந்தனின் அப்பா வங்கி ஒன்றில் பணி புரிகிறார். தாய் நடுத்தர பள்ளி ஒன்றில் பணிபுரிகிறார்.

◆

''வாப்பா முகுந்தன். அக்கா எங்கே போயிருக்கா?'' என்று வாடிக்கையாகப் பால் கொடுக்கும் பரிமளம் பாட்டி கேட்டாள்.

''அவ டில்லிக்கு பிரதமரைப் பார்க்கப் போயிருக்கா!''

''ஏன் கோபப்படுறே முகுந்தா?''

''பின்னே என்ன நானே விளையாட்டை விட்டுட்டு வந்துட்டோமேன்னு இருக்கேன். நீங்க வேற...

அவ மாவு அரைக்கிறா! அதான் நா வந்தேன். இந்தாப்பாட்டி சொம்பு. உடனே பால் கொடுங்க...



''இப்படி உட்காரு... கறந்து தர்றேன்!...

''போச்சடா... இனிமே தான் கறந்து தர்வீங்களா? முன்னேயே கறந்து வச்சா மாடு கோவிச்சுக்குமா?... நான் உடனே போகணுமே!...

''எப்போதும் நீங்க வந்த பின்தானே நான் கறப்பேன்...''

''எப்படியோ வளவளன்னு பேசாம உடனே கறந்து கொடுங்க. நான் விளையாடப் போகணும். அங்கே ராமு காத்துகிட்டு இருப்பான்...'' என்று படபடத்துச் சொன்னான்.

அவன் சொன்னதையும், துடிப்பதையும் கண்ட பாட்டிக்கு சிரிப்பு வந்தது.

''சரி கண்ணு. கொஞ்ச நேரம் இப்படி உட்காரு, இதோ ஒரு நொடியிலே வந்துடுறேன்'' என்று கூறி விட்டு பாட்டி பால் கறக்கப் போனாள்.

இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டு இருந் தான் முகுந்தன்.

''ராமு நாம் போகும் வரை யாரோடும் சேர்ந்து விளையாடாமல் இருப்பானோ? இல்லை யாரோட யாவது சேர்ந்து விடுவானோ...'' என்று எண்ணினான்.

நுரை பொங்கப் பொங்க பால் கறந்து வந்த பாட்டி, ''கண்ணு, இப்படி சொம்ப கொண்டா...'' என்றாள்.

'சுடச் சுட பாலை அளந்து செம்பில் ஊற்றினாள். ஊற்றியதுதான் தாமதம். செம்பை மூடிக் கொண்டு கன்றாய் துள்ளி ஓடினான்.

''கண்ணு, பாத்துப் போப்பா...'' பாட்டி சொன்னது காதில் விழுவதற்கு முன்பே அங்கிருந்து போய் விட்டான், முகுந்தன்.

ஓட்டமும் நடையுமாக கோலி விளையாட்டை நினைத்த படியே வந்து கொண்டிருந்தான்.

அடுத்த தெருவில் இருந்து யாரோ பட்டம் விடுவது முகுந்தனின் கண்ணில் பட்டது.

அந்த கலர் பட்டத்தை அண்ணாந்து பார்த்தபடியே வந்தவன் கல் ஒன்று தடுக்கி விட, கீழே விழுந்தான்.

அதனால், பால் செம்பு மூடி கழண்டு கீழே விழுந்தது.

ஒரு லிட்டர் பாலில் கால் லிட்டர் பால் கீழே கொட்டி விட்டது.

செம்பின் மூடி முழுவதும் மண்ணாக இருந்தது. எடுத்துத் துடைத்தான். இருந்தாலும் மண் அப்பிக் கொண்டு இருந்தது.

அருகில் இருந்த குளத்தை நோக்கி நடந்தான். மூடியைக் கழுவி விட்டு பால் செம்பை மூடப் போகும் போது, 'இவ்வளவு பால் ஊற்றி விட்டதே; அம்மாவுக் குத் தெரிந்தால் அப்பாவிடம் சொல்லி உதை வாங்க வைப்பார்களே' என்ற பயம் வந்தது.

என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

அடுத்த நொடியே, ஆமாம் அப்படித்தான் செய்ய வேண்டும்... அம்மாவிற்கு எப்படித் தெரியும்? என்றவன் தன் எண்ணப்படியே செம்பின் மூடியால் பால் ஊற்றிய அளவு குளத்து நீரை மொண்டு ஊற்றி செம்பை மூடினான்.

வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கியவனுக்கு கால் முட்டியில் வலி எடுத்ததும் குனிந்து பார்த்தான். விழுந்ததில் சிராய்ப்பு ஏற்பட்டு லேசாக ரத்தம் கசிந்து கொண்டு இருந்தது. அதை ஒரு கையால் துடைத்து விட்டு - விளையாட்டு ஆர்வத்தால் மீண்டும் வேக மாக நடக்கத் தொடங்கினான்.

◆

முகுந்தன் பால் செம்பை மேஜை மீது வைத்தது தான் தாமதம், 'இதோ பால் இருக்கு' என்றவன் தெருவிற்கு விளையாட வந்து விட்டான்.

பாலைக் காய்ச்ச பாத்திரத்தில் ஊற்றிய முகுந்தனின் தாய்க்கு 'பக்' கென்றிருந்தது.

'பாட்டி வீட்டுப் பால் ஒரு நாளும் இப்படி இருக்காதே! இது எப்படி?'' என்று எண்ணி குழம்பிக் கொண்டு இருக்கும் போதே அலுவலகம் விட்டு வீட்டினுள் நுழைந்தார் முகுந்தனின் தந்தை.

''நீலா கொஞ்சம் காபி கொடேன் லேசா தலை வலிக்குது.'' என்று கேட்டுக் கொண்டே உடைகளை கலைந்தார் மருதநாயகம்.

''இதோ பாருங்க...'' என்று பால் பாத்திரத்தோடு அவரின் அருகில் வந்து நின்றார் அவர் மனைவி, நீலா.

''காபி கேட்டேன் நீ என்னடான்னா பாலைக் கொண்டு வந்து காண்பிக்கிறே'' என்று சொல்லி சிரித்தார்.

''உங்களுக்கு எப்போதும் விளையாட்டுத்தான்! இதோ பாருங்க, பாட்டி வீட்டுப் பால் ஒரு நாளும் இப்படி தண்ணியா இருந்தது இல்லை. அதனால தான் மூணு வருஷமா அவுங்க கிட்டேயே வாங்கு றோம். இன்னிக்கு என்னடான்னா, தண்ணியிலே பாலைக் கலந்தது போல இருக்கு...''

''ஓ அப்படியா விசயம்? சரி நீ காச்சும் போது தண்ணிதானே ஊத்துவே. நீ சிரமப்பட வேண்டா மேன்னு இன்னைக்கு அவுங்களே ஊத்திட்டாங்க போல இருக்கு...''

''எதைச் சொன்னாலும் கிண்டல் தானா? கொஞ்சம் இருங்க நான் போய் கேட்டுட்டு வந்துடுறேன்...'' என்று புறப்பட்டார்.

''இதோ பாரு நீலா, யார் இன்னைக்குப் பால் வாங்கி வந்தா?'' என்று கேட்டார்.

''வாணி இட்லிக்கு மாவு ஆட்டுறாளேன்னு இன்னைக்கு முகுந்தனை அனுப்பிச்சேன்...''

''எங்கே அவன்?...

''தெருவிலே விளையாடிகிட்டு இருப்பான்...''

''கூப்பிட்டு அவனையே போய் வரச் சொல்...'' என்றதும், அவனை அழைக்கச் சென்றார்.

முகுந்தன் உள்ளே வரும் போதே பயந்து கொண்டே வந்தான்.

''படிக்கிற நேரத்திலே விளையாடியதுக்கு அப்பா தன்னை எதால் அடிக்கப் போகிறாரோ?'' என்று எண்ணிய படியே வந்து அறைக்குள் நுழைந்தான்.

நுழைந்தவனைப் பார்த்து அவன் தந்தை கேட்டார்.

''நீதான் இன்னைக்குப் பால் வாங்கப் போனாயா?'' கேட்டார்.

''ஆமாம், அப்பா...'' என்பது போல் தலையசைத் தான்.

''எப்போதும் வாங்குற பாட்டி வீட்டிலேதானே வாங்கினே?...''

''அங்கேதான் வாங்கினேன்...''

''பாட்டிதான் கொடுத்தாங்களா?''

''ஆமாம். பாட்டிதான் நான் போனதும் கறந்து வந்து கொடுத்தாங்க...'' என்றான்.

''அப்புறம் எப்படி பால் தண்ணியா இருக்கும்?...''

''எனக்கு என்ன தெரியும்? அவுங்க அப்படித்தான் கொடுத்தாங்க...''

''ஓ, அப்படியா?... என்றவர், அவன் காலில் அடிபட்டு இருப்பதைக் கண்டு'' ''அது என்னப்பா புண்ணு? கீழே விழுந்துட்டியா?...''

''ஆமாம்!...''

''எப்பப்பா விழுந்தே?...''

''இப்பத்தான். பால் வாங்கி வரும்போது...''

கீழே விழுந்தது, பால் தண்ணீராய் இருப்பது இரண் டையும் சிறிது நேரம் ஒப்பிட்டுப் பார்த்தார். பின்....

''இதோ பார் முகுந்தன் தவறு யாருக்கும் நடக்க லாம். ஆனால், அதுக்காக யாரும் எப்போதும் எந்த

சூழ்நிலையிலேயும் உண்மையைத்தான் பேசணும். பொய் மட்டும் பேசவேக் கூடாது. புரியுதா?...''

எதுக்காக தன் அப்பா இப்படி பேசுகிறார் என்பது முதலில் புரியவில்லை. பின்தான் புரிந்தது.

'சரி' என்பதுபோல் தலையாட்டினான், முகுந்தன்.

''தடுக்கி கீழே விழுந்தே, சரிதான். அதுக்காக கீழே ஊற்றிய பாலுக்காக நீ தண்ணீர் ஊற்றிக் கொண்டு வரலாமா? அப்படி எல்லாம் செய்யக் கூடாது. தவறி போனதை வந்து அம்மாகிட்டே அல்லவா சொல்லணும். அதை விட்டுட்டு, பொய் சொல்லலாமா?... சரி போய் கால், கை கழுவிட்டு படி...'' என்றார்.

தன்னை அடிக்கப் போகிறார் என்று பயந்து கொண்டு இருந்தவன் அவரின் பேச்சால் மனம் திருந்தி கிணற்றை நோக்கிப் போனான்.

ஒன்றுமே புரியாத நிலையில் திகைத்து நின்றாள் முகுந்தனின் தாய் நீலா!

2. அப்பா, அது தப்பு!

அலுவலகத்தில் இருந்து வீட்டினுள் வந்து நுழைந்த துமே சத்தம் போட்டுக் கத்தத் தொடங்கி விட்டார் கோதண்டம்.

''ஏய் சந்திரா...''

''இதோ வந்துட்டேங்க...'' என்றபடியே அடுக் களையில் இருந்து ஓடி வந்தாள் அவர் மனைவி.

''இந்தப் பேனாவை யார் எடுத்தது? இங்கு இருந்த புத்தகத்தை எல்லாம் யார் கலைத்து வைத்தது?...''

''இதுக்குத்தான் இந்த சத்தமா? என் தங்கச்சிப் பிள்ளைங்க ஊரிலே இருந்து வந்து கலைச்சுப் போட்டுட்டு இப்பதான் பஸ்ஸுக்குப் போறாங்க...''

''என்னடி கிண்டலா?...''

''என்னங்க பின்னே? இவனுங்க ரெண்டு பேரும் செய்யிற அட்டூழியம் கொஞ்சமா, நஞ்சமா? நான் எதுவும் சொல்ல முடியிலே! இவன்களை நீங்களே கேளுங்க...'' என்றபடியே அடுப்படிக்குப் போக முனைந்தவளிடம்



''இப்ப எங்கே அவனுங்க?'' என்று கேட்டுக் கொண்டு இருக்கும் போதே செந்திலும், சேகரும் பட்டத்தோடும், பம்பரத்தோடும் வந்தார்கள்.

அப்பா கோபமாக இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்ட இருவரும் தாயின் பின்புறம் மறைந்து கொண்டார்கள்.

''டே, இங்கே வாங்கடா! போனாவை எடுத்தது யார்? புத்தகத்தை கலைத்தது யார்?'' அதட்டலோடு கேட்டார்.

செந்திலும், சேகரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''என்னடா, நான் கேட்கிறேன், பதில் சொல்லாமல் நிக்கிறீங்க?...''

''வந்துப்பா... மன்னிச்சிடுங்கப்பா... இனி செய்ய மாட்டோம்...'' இருவருமே இழுத்தார்கள்.

''என்னடா, செய்யிறதையும் செய்துபுட்டு...'' என்று சொல்லியபடியே ஆளுக்கு நாலு அடி போட்டார்.

துடித்துப் போனார்கள்.

''என்னங்க இப்படியா பிள்ளைங்கள அடிக்கிறது?'' கண்கள் கலங்க தாய் கேட்டாள்.

''நீ சும்மா இரு. இவன்களை இப்படியே விட்டா அவ்வளவுதான்.''

மீண்டும் ஆளுக்கு நாலு போட்டார். எதிர்த்து எதுவும் பேச முடியாத இருவரும் கண்ணீர் விட்ட படியே நின்றார்கள்.

''இனி இப்படி செய்வீர்களா?...'' கேட்டார்.

''செய்ய மாட்டோம். மன்னிச்சிடுங்கப்பா...'' மீண்டும் இருவரும் சொன்னார்கள்.

''என்னடா இன்னும் நின்னுகிட்டு, போய் காலை, கையைக் கழுவிகிட்டுப் படிக்கப் போங்க. வர்றேன்.''

இருவரும் கண்ணீரைத் துடைத்தபடியே கிணற்றுக் குப் போனார்கள்.

◆

மாலை நேரம்

''அப்பா வரட்டும், நீ அடிச்சதை எல்லாம் அப் படியே சொல்றேன்.'' செந்தில் அழுதபடியே சொன் னான்.

''போடா, சொல்லிக்க. நானும் சொல்றேன்; நீ என் பேனாவை உடைச்சதை!!...'' என்றான் அவனை அடித்ததைப் பெருமையாக நினைத்த படியே.

இவர்கள் பேசிக் கொண்டு இருக்கும் போதே அப்பா வந்து சேர்ந்து நேராக அறைக்குள் சென்று ஆடைகளைக் களைந்து விட்டு, மாற்றுடை அணியும் போது மெல்ல அறையினுள் செந்தில் நுழைந்தான், அழுதபடியே.

''என்னப்பா செந்தில், நீ ஒழுங்கா இருந்தா ஏன் அம்மா உன்னை அடிக்கப் போறாங்க?'' என்றார். அவன் அழுவதற்குக் காரணம் அவன் அம்மாதான் அடித்து இருப்பாள் என்ற எண்ணத்தில்.

''அப்பா! என்னை அம்மா அடிக்கலை...''

''பின்னே யாரு?...''

''சேகர்தான்...''

''ஆமாம்ப்பா! மேஜையில் இருந்த அவன் பேனாவை எடுத்தேன். அது கை தவறி விழுந்து நிப்பு உடைஞ்சி போச்சி. உடனே நானும் 'தெரியாம நடந்துடுச்சி, அண்ணே! என்னை மன்னிச்சிடு'ன்னேன்

நான் எவ்வளவோ சொல்லியும் கேட்காம ரொம்ப அடிச்சிட்டான்...''

''மூடி இருந்த பேனா கீழே விழுந்தா எப்படிடா உடையும்?...'' கேட்டார்.

''பேனாவை மூடி வைக்காமலே அவன் விளையாடப் போயிட்டான்...''

''அதானே பார்த்தேன்.. வா என்னோட!'' என்றதும் தந்தையின் பின் தொடர்ந்தான்.

அறையினுள்ளே இருவருக்குள்ளும் என்ன நடந்து இருக்கும் என்று ஒருவாறு உணர்ந்து கொண்ட சேகர், அவர்களைப் பார்த்தும் பார்க்காததுபோல், இடுக்கண் வருங்கால் நகுக... என்ற திருக்குறளை மனப்பாடம் செய்வதுபோல் படித்துக் கொண்டிருந்தான்.

''டே சேகர்... ஏண்டா செந்திலை அடிச்சே?...''

அவன் நடந்ததை எல்லாம் சொன்னான்.

''எல்லாம் சரிதான், எழுதி முடித்ததும் பேனாவை நீ ஏண்டா மூடி வைக்கல?'' என்றதும், அவன் தவறை மறைக்க முடியாது விழித்தான்.

''செந்தில் இங்கே வா! உன்னை எத்தனை தடவை அடிச்சான்?...'' சிறிது யோசனைக்குப் பின் சொன்னான், ''நாலு தடவையப்பா...''

''அப்படியா! அதே அடியை இப்ப நீ அவனுக்குக் கொடு.''

இதே நேரம் காபியுடன் சந்திரா அங்கே வந்தாள்!

''ஏண்டா செந்தில் சும்மா இருக்கிறே... ம்... அவனை அடி...''

செந்தில் மேலும் தயங்கியபடியே நின்றான்!

மீண்டும் சொன்னார். ''நீ அடி, நான் இருக்கேன்...''

அவன் மறுபடியும் தயங்க...

''ஏன்டா?...''

''அண்ணன் என்னை விடப் பெரியவன் வயதில் மூத்தவன்.

''இருந்தா என்ன?...''

''அது தப்புப்பா!...''

''எதுடா தப்பு?...''

''அடிக்கிறதுதான்!...''

குழந்தைகள் இருவருக்கும் காபியைக் கொடுத்து விட்டு, தன் கணவர் கோதண்டத்தை அறைக்குள் அழைத்துப் போனாள்.

''ஏன் சந்திரா? கொஞ்சம் இரு... அவனுங்களுக்கு ஒரு முடிவு எடுத்துட்டு வர்றேன்...''

''இப்ப எடுக்க வேண்டியது அவனுங்களுக்கு இல்ல நமக்குத்தான்!...''

''நீ என்ன சொல்றே?...''

''ஆமாங்க. எத்தனை முறை நாம பிள்ளைங்களை அடிச்சிருக்கோம். ஏதாவது எதிர்த்துப் பேசியிருக்காணுங்களா? அடிக்க கையை ஓங்கி இருக்காணுங்களா? வாயில்லாப் பூனைங்களை நாம சீண்டினா கூட அது எதிர்ப்பைக் காட்ட காலத் தூக்குதே... ஆனா இவனுங்க... காரணம் என்னங்க?... நாம பெரிய வங்கன்ற எண்ணத்தாலேதான்! இல்லாது போனா, செந்தில் அந்த வார்த்தையைச் சொல்லியிருக்க மாட்டான்.

கோதண்டம் அவள் பேசியதைக் கேட்டு ஒரு நிமிடம் சிலையாகிப் போனார்.

●

3. தாத்தா சொத்து...

ரமேஷ், தனியார் பள்ளி ஒன்றில் எட்டாவது படிக்கிறான். ரமேஷின் தந்தை அஞ்சல் துறையில் பணியாற்றுபவர். நேர்மையானவர். ரமேஷ் வீட்டில் இருக்கும் நேரத்தை விட விளையாட்டு மைதானத்தில் இருக்கும் நேரமே அதிகமாகும்.

காலத்திற்கு ஏற்ப கோலி கிட்டிப்புல், பம்பரம், பட்டம் இப்படி எதையாவது ஒன்றை கைக் கொண்டு நண்பர்களோடு ஆடத் தொடங்கி விடுவான்.

சென்ற மாதம் அப்படித்தான் ஒரு ஞாயிறு விடு முறையில் மதியம் கூட சாப்பிடாமல் விளையாடிக் கொண்டிருந்தான்.

பக்கத்து ஊரில் உள்ள நண்பர் ஒருவர் வீட்டிற்குச் சென்று விட்டு மூன்று மணியளவில் வந்தார் ரமேஷின் அப்பா, சங்கர்.

வீட்டில் நுழைந்ததுமே அவர் கேட்டது இதுதான், ''ரமேஷ் எங்கே?''

''எனக்கு என்னத் தெரியும்? அவன் எங்கே விளை யாடுறானோ தெரியிலே. நானும் அவன் நண்பர்கள்

வீட்டை எல்லாம் போய் பாத்துட்டு வந்து இப்பதான் வீட்டுலே நுழைஞ்சேன். எங்கேயும் காணோம்.'' என்றாள், சலிப்போடு அவன் அம்மா.

''சாப்பிட்டாவது போனானா?'' என்று கேட்டார்.

''எனக்கு அதுதானே கவலை. அவனைக் காணாம நானும் இன்னும் சாப்பிடாமதான் இருக்கேன்...'' என்றாள்.

மனைவி மாதவி சொல்லி முடித்ததும் அடுத்த நிமிடமே வீட்டின் முன் நிறுத்தி வைத்திருந்த சைக் கிளை எடுத்துக் கொண்டு சங்கர் நேரே மேலத் தெருக்கோடியில் உள்ள ஆலமரத்து மைதானத்தை நோக்கிப் போனார்.

''இன்னைக்கு அவனை ஒரு வழி பண்ணிடனும்'' என்ற எண்ணத்தோடு கோபமாக சைக்கிளை வேகமாக மிதித்தார்.


இவனை இப்படியே விட்டால் எதிர் காலத்தில் என்ன ஆவானோ என்ற பயம் அவருள் எழுந்தது.

சைக்கிள் முன்னை விட படுவேகமாக உருண்டது.

ஆலமரத்து மைதானத்தை நெருங்கும் முன்பே ரமேஷ் அங்கு இருப்பது நன்றாகத் தெரிந்தது.

விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் எல்லாம் சைக்கிள் வரும் ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த் தார்கள்.

தன் தந்தையைப் பார்த்த ரமேஷோ ஆலமரத்தில்



பின்புறம் போய் ஒளிந்து கொண்டான்.

சைக்கிளை நிறுத்தி விட்டு,'' டேய், ரமேஷ் எங்கேடா?'' என்று அங்கு நின்றிருந்த அவன் நண்பர் களிடம் கேட்டார்.

எல்லாரும் என்ன சொல்வது என்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

அதே நேரம் மரத்தின் ஓரம் நின்று பயத்தோடு ரமேஷ் எட்டிப் பார்த்தான். அவனைப் பார்த்த அவன் அப்பா, ''டே, ரமேஷ் இங்கே வாடா!'' என்று அதட்ட லோடு கூப்பிட்டார்.

ஆலமரத்தினின்று வெளிப்பட்ட அவனின் ஒரு கையில் பம்பரமும், மறுகையில் கயிறும் இருந்தன.

ரமேஷின் தந்தை விழிகள் கீழ்வானச் சிவப்பாகி யது.

''சாப்பிட்டியாடா?...''

''இல்லப்பா!...''

அதை விட பம்பர விளையாட்டு உங்களுக்கு முக்கியமாய் போயிடுச்சோ?...'' கோபமாக கேட்டது அவனுக்குப் புரிந்தது.

''இப்ப போயி சாப்பிடுறேம்பா...'' என்று சொல்லி ஓடத் தொடங்கியவனை எட்டிப் பிடித்து ''ம்... சைக்கிளில் ஏறு...'' என்றார்.

சைக்கிள் வந்த வேகத்திலேயே வீட்டை நோக்கித் திரும்பியது.

வீட்டிற்குள் அழைத்து வந்ததும் ரமேஷிடம் ஏதும் பேசவில்லை. அவன் கையிலிருந்த பம்பரத்தையும், கயிற்றையும் வாங்கியவர் அடுத்த நிமிடமே அரி வாளை எடுத்து பம்பரத்தை ஒரே வெட்டாக வெட்டி விட்டு, கயிற்றையும் அறுத்துப் போட்டார்.

''ராஸ்கல், உன்னை நான் விளையாட வேண் டான்னா சொல்றேன். குறிப்பிட்ட நேரம் காலையிலே யும், மாலையிலேயும் விளையாடு. மற்ற நேரத்தை

வீணாக்காமல் படின்னா. நீ சாப்பிடாமக் கூட விளையாடுற?'' என்ற படியே அவன் அருகில் வந்து இரண்டு அறைகளை கன்னத்தில் விட்டார்.

ரமேஷ் துடித்துப் போனான்!

பதட்டத்தோடு அவன் தாய் ஓடி வந்து ''இனி அப்படி செய்ய மாட்டான். அடிக்காதீங்க!...'' என்று தடுத்தாள்.

''நீ ஒவ்வொரு நாளும் இப்படித்தான் சொல்றே. இவன் திருந்தி இருக்கானா?... பெரியவங்க சொல் றாங்களேன்னு மதிப்புக் கொடுத்திருக்கானா? ராஸ்கல். இங்கே வாடா... இனிமேலாவது ஒழுங்கா இருப்பியா?'' எனக் கேட்டார்.

'இருப்பேன்' என்பதற்கு அடையாளமாக அழுத படியே தலையாட்டினான்.

இந்த நிகழ்ச்சியில் இருந்து ரமேஷிற்கு சுத்தமாக அவன் தந்தையைப் பிடிக்காமல் போய் விட்டது.

அவரோடு பேசுவதையே அவன் தவிர்த்து வந்தான். அவசியம் ஏற்பட்டால் மட்டுமே பேசினான். இப்போது எல்லாமும் அவன் தாய்தான். அவரோடு தான் கடைக்குப் போவது, கோவிலுக்குப் போவது எல்லாம். இந்த நிலையில்...

◆

பொங்கலுக்காக சங்கர் தன் சொந்த ஊரான தஞ்சை மாவட்டத்திலுள்ள திருப்பாலைத்துறைக்கு குடும்பத்தோடு சென்றிருந்தார்.

தன் ஒரே மகன் சங்கர் குடும்பத்தோடு வந்திருந்தால் அவன் தந்தை வெங்கிடாசலத்திற்கும் தாய் தனலெட்சுமிக்கும் ஏக மகிழ்ச்சி.

பாட்டியும், தாத்தாவும் ரமேஷை ஒருவர் மாற்றி ஒருவர் போற்றி புகழ்ந்து கொண்டு இருந்தார்கள்.

ஒரு நாள் ரமேஷை அழைத்துக் கொண்டு கோவிலுக்குப் போய் வந்த அவன் தாத்தா சேரில் அமர்ந்து அன்றைய பேப்பரைப் படித்துக் கொண்டு இருந்த சங்கரைப் பார்த்து,'' ஏண்டா சங்கரு, வயலுக்கு உரம் வாங்கப்போன கலியன் வந்துட்டானா?'' என்று கேட்டார்.

''இல்லப்பா!...''

''உன்னைப் போய் பார்த்துட்டு வரச் சொன்னேனே இன்னும் நீ போய் பார்த்துட்டு வர்லியா?...''

''மறந்துட்டேம்பா! இதோ போறேன்...'' என்று படபடப்போடு பயந்தபடியே படித்த பேப்பரை அவசர அவசரமாகப் மடித்துப் போட்டு விட்டு, உடனே வெளியேறிப் போனார்.

தந்தை, தன் தாத்தாவின் சொல்லிற்குக் கட்டுப் பட்டு வேகமாக வெளியே போவதையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த ரமேஷ் நினைத்தான்...

‘அப்பாவுக்கு இவ்வளவு வயசாகுது. அப்படியிருந்தும் தாத்தாவைக் கண்டு இன்னும் நடுங்குகிறாரே - மரியாதையாக அவர் சொன்னதைக் கேட்டதும் இப்படி ஆடுறாரே’’ என்று நினைத்ததும் அவன் மனம் சுருங்கியது.

அப்பாவை மதிக்காமல் - அவர் சொல்வதைக் கேட்காமல் நாம் நடந்து கொண்டோமே... அது எவ்வளவு பெரிய தவறு. இனி... எந்த நிலையிலேயும் அப்பா, அம்மா சொல்வதைக் கேட்க வேண்டும்.

வெளியில் சென்றுள்ள அப்பா வந்ததும் அவரோடு மனம் விட்டுப் பேச வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

இப்போது ரமேஷ் எந்த நேரமும் விளையாடுவது இல்லை. படிப்பில் கவனம் செலுத்தினான்.

முன்பு வகுப்பில் எட்டாவது ‘ரேங்’கில் இருந்தவன் இப்போது இரண்டாவது இடத்திற்கு வந்தான்.

அடுத்து, அவன் முதல் இடத்தில் இருப்பான் என்பதை சொல்லவும் வேண்டுமோ?

●

4. சிங்கமும் முயலும்!

சிங்கத்தின் கொடுமை ஒவ்வொரு நாளும் கூடிக் கொண்டு போவதை அறிந்த காட்டு விலங்குகள் ஒன்று கூடி ஒரு முடிவெடுத்தன.

''இதோ பாருங்க, சிங்க ராஜாவிற்கு பசி எடுக்கும் போது எல்லாம் வெறியோடு வந்து தன் தேவைக்கு மேல் வீணாக எல்லோரையும் அடித்துப் போட்டு விட்டு போய் விடுகிறது. இதற்கு நாம் இன்றே ஒரு முடிவெடுக்க வேண்டும். யாராவது ஒரு நல்ல முடி வினைக் கூறுங்கள்...'' என்று கூறி நிறுத்தியது, மாடு.

'நான் கூறுகிறேன்' என்று முன் வந்தது, மான்!

''அதாவது ஒரே நாளில் பலர் அழிவதை நிறுத்த வேண்டுமானால், ஒவ்வொரு நாளும் அதன் இருப்பிடத்திற்கு நம் இனத்தில் ஒவ்வொருவர் போய் விட வேண்டும். அவர் பசியும் தீர்த்து விடும். நம் இனமும் கண்டபடி அழிய வாய்ப்பு இல்லாது போய் விடும்'' என்றது.

மானின் முடிவைக் கேட்ட யாவும், ''சரி நல்ல திட்டம்தான்'' என்று ஒப்புக் கொண்டன.



''நம் திட்டத்தை சிங்க ராஜாவிடம் எப்போது கூறுவது?'' வெள்ளாடு கேட்டது.

''அதற்கு என்ன காலம் தாழ்த்துவது? உடனே போக வேண்டியதுதான். வாருங்கள் இப்போதே போவோம்'' என்றது பன்றி.

'சரி' என்று சிங்கத்தின் குகையினை நோக்கி விலங்குகள் யாவும் புறப்பட்டன.

◆

யானையே சிங்கத்திடம் மீண்டும் பேசியது. ''இதுதான் எங்களின் முடிவு. தங்களின் முடிவு என்ன?'' என்றது.

''இதில் என்ன இருக்கிறது? எனக்கும் மகிழ்ச்சி தான்! ஆனால்... ஒன்று... சரியாக உச்சிப் பொழுதிற் குள் வந்து விட வேண்டும். கொஞ்சம் காலம் தாழ்ந் தாலும் உங்களை நான் சும்மா விட மாட்டேன். சரியா?...'' என்று கேட்டது, சிங்கம்.

கூடி இருந்த எல்லா விலங்குகளும், ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன.

''என்ன மௌனம் சாதிக்கிறீர்கள்?'' என்று அதட்டலோடு கேட்டது சிங்கம்.

''உடனே மாடு, ''சரி அரசே!'' என்றது.

அதைத் தொடர்ந்து, ''அப்படியே'' என்றது மற்றவைகளும்.

கூட்டம் கலைந்தது.

◆

மறு நாள் சிங்கம் பசியோடு காத்துக் கொண்டு இருந்தது.

அதே நேரம், மான் ஒன்று வந்தது. அதன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. ''அரசருக்கரசே! இன்று எங்கள் இனத்தில் இருந்து தங்கள் உணவிற்காக நான் வந்திருக்கிறேன். தங்கள் எண்ணம்போல் என்னை உண்டு பசியாருங்கள்.'' என்று மான் கூறியதும், சிங்கம் அதன் மேல் பாய்ந்து கொன்று, தின்று பசியாற்றி குகையில் போய் படுத்துக் கொண்டது.

இப்படியே ஒவ்வொரு நாளும் ஆடு, மாடு, மான் என்று அடித்துத் தின்று பசி தீர்த்துக் கொண்டிருந்தது சிங்கம்.

அன்று முயல் தன் உணவிற்காக வரவேண்டிய நாள்.

உச்சிப் பொழுதாகியும் அது வந்து சேரவில்லை.

சிங்கத்திற்கோ பசி வயிற்றைப் பிசைந்தது.

முயல் சிந்தனையோடு மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தது. களைப்புத்தீர ஒரு கிணற்றின் மேல் ஏறி அமர்ந்து சிந்தித்தது.

'இன்று நாம் சிங்கத்திடம் உயிரை இழக்கக் கூடாது. நாம் இன்னும் நீண்ட நாள் வாழ வேண்டும் எப்படி அதனிடம் இருந்து தப்புவது?' இப்படி சிந்தித்தபடியே கிணற்றை எட்டிப் பார்த்தது.

கிணற்றுக்குள்ளே அதன் உருவம் தெரிந்தது.

அதைக் கண்ட முயலின் மூளையில் சிந்தனை மேலும் படர்ந்தது.

'ஓ! அப்படித்தான் செய்ய வேண்டும். என்றபடியே கிணற்றை விட்டு இறங்கி நடக்கத் தொடங்கியது.

சிங்கம் பசியோடு இருந்தது, 'இன்று முயல் வரட்டும் ஒரே நசுக்கு நசுக்கி...' என்று ஆத்திரத்தோடு மண்ணைப் பிராண்டிக் கொண்டு இருந்தது.

காலம் தாழ்த்தி முயல் சிங்கத்தின் முன் நின்றது.

''நான் பசியோடு இருப்பேன் என்று உனக்குத் தெரியாதா? அற்பப் பதரே. ஏன் இவ்வளவு நேரம்?'' என்று அடிப்பதுபோல் அதட்டலோடு சிங்கம் கேட்டது.

அது கேட்டதற்கு ஏதும் பதில் சொல்லாது அலட்சியமாக, முயல் நின்றதைப் பார்த்ததும் சிங்கத்திற்கு மேலும் கோபம் வந்தது.

''நான் கேட்பதற்கு பதில் சொல்லாமல் என்ன முறைத்துப் பார்க்கிறாய்? உன் குண்டு மணி விழிகளைத் தோண்டி விடுவேன் தோண்டி. ஏன் தாமதம்?''

முயல் அலட்சியமாக சிங்கத்தைப் பார்த்துச் சொன்னது.

''என்னை நீ அடிப்பது இருக்கட்டும்; கண்களை தோண்டுவது இருக்கட்டும். முதலில் உன்னை விடபெரியவன் ஒருவன் வந்து, என்னை அவன் உணவிற்கு இரையாக்கப் பார்த்தான். அவனை நீ என்ன செய்ய முடியும்? என்னைப் போல் எளியவர் களிடம் தானே உன் வீராப்பு எல்லாம்?'' என்றது.

''என்ன? என்னை விட இங்கே ஒருவன் பெரியவனா? மலை போன்ற யானையே என்னைக் கண்டு பணிந்து போகும்போது!... நீ என்ன உளறு கிறாய்?...''

''நான் ஒண்ணும் உளரவில்லை!''

''அப்படியா? அவன் எங்கே இருக்கிறான்? எனக்கு இப்போதே காட்டு - பிறகு உன்னை நான் கவனிக் கிறேன்! எங்கே புறப்படு...'' என்றதும் முயல் மகிழ்ச்சி யோடு அதன் முன்னே பாய்ந்து பாய்ந்து போனது.

'அப்பாடா! இன்று சிங்கம் தொலைந்தது. இனி நமக்கு மட்டுமல்ல. இங்கே உள்ள அனைவருக்கும் விடிவு காலம்தான்' என்று எண்ணியபடியே விரைந்து முன்னே முயல் போக சிங்கம் பிடறி சிலிர்க்க கோபத் தோடு பின்னே போய்க் கொண்டிருந்தது.

வேகமாக சென்று கொண்டிருந்த முயல் நின்றது.

அதைக் கண்ட சிங்கம் கேட்டது, ''ஏன் நின்று விட்டாய், பதரே? எங்கே அவன்?...''

''அதோ அந்தக் கிணற்றுக்குள்தான் இருக்கிறான், போய் பாருங்கள்...''

''சிறு பயலே! என்னை யார் என்று நினைத்தாய்? 'நான் வருகிறேன்' என்று தெரிந்த பின்னும் அவன் அங்கே இருப்பானா என்ன? நீ போய் அவன் இருக்கிறானா என்று பார்த்து வா. பிறகு நான் சென்று சந்திக்கிறேன். அந்த கிணற்றிலேயே அவனையும் உன்னையும் சமாதி ஆக்குகிறேன்!'' என்று கூறி கர்ஜித்தது.

முயலுக்கு கொஞ்சம் பயம் எடுத்தது. இருந்தாலும் கொஞ்சம் மிடுக்கோடு முன்னேறி சென்றது.

கிணற்றை எட்டிப் பார்த்தது. முயலின் உருவம் அதில் தெளிவாகத் தெரிந்தது.

மகிழ்ச்சியோடு திரும்பிய முயலைப் பார்த்துக் கேட்டது சிங்கம், ''என்ன இன்னும் இருக்கிறானா?...''

''ஆமாம்! அங்கேதான் இருக்கிறான்! உங்களை ஒரு கை பார்க்கிறேன் என்றான்'' என்றது முயல்.

''என்ன, என்னை ஒரு கை பார்க்கிறானா? யாரவன்? வா, என்னோடு!'' என்று பாய்ந்து சென்றது சிங்கம்.

''என்ன? எங்கே அது?'' என்று மேலும் கோபத் தோடு கேட்டது.

''இதோ இங்கேதான் கிணற்றுக்குள்'' என்றது.

சிங்கம் கிணற்றை எட்டிப் பார்ப்பதற்கும் மேலே பறந்து சென்ற காக்கை ஒன்று எச்சமிடவும் சரியாக இருந்தது.

அதன் எச்சம் கிணற்று நீரில் விழுந்ததும் தண்ணீர் கலங்கிப் போனது.

கலங்கிய நீரை எட்டிப் பார்த்த சிங்கத்திற்கு ஏதும் தெரியவில்லை.

''எங்கே காணோம்?'' என்றதும் முயல் ஓடிவந்து கிணற்றை எட்டிப்பார்த்தது.

தண்ணீர் கலங்கியதால் முயலுக்கும் தன் உருவம் தெரியவில்லை. பயம் வந்தது முயலுக்கு.

''இங்குதானே இருந்தது!'' என்றது பயத்தோடு.

''எங்கே இருந்தது? இப்போ எங்கே போனது?''

''இங்கேதான் இருந்தது!'' என்றது மீண்டும் முயல்.

''இந்த மனிதப் பசங்களைப் போல் சொன்னதையே திருப்பித் திருப்பி ஏன் சொல்லிக் கொண்டு இருக் கிறாய்!''

''அரசே! இங்குதான் இருந்தது!''

சிங்கத்திற்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை. ''என்ன இங்கேயா? அப்படியா?... சரி... நீயே தேடிக் கண்டு பிடித்துக் கொண்டு வா. நான் இங்கேயே இருக்கிறேன்'' என்று சொல்லியபடியே முயலை ஒரு கையால் பிடித்து கிணற்றுக்குள் தூக்கிப் போட்டது.

கிணற்று நீரில் அடுத்த நொடியே தொப்பென்று முயல் போய் விழுந்தது.

விழுந்த முயல் மூச்சு முட்ட தண்ணீரைக் குடித்து திணறிய படியே தவித்து தாவி நீந்தியது.

சிங்கத்திற்கு கோபம் மட்டும் அதிகமாகவில்லை. பசியும் அதிகமாகியது.

சிறிது நேரத்தில் முயல் தத்தித் தாவி நீந்தி கிணற்றுப்படி ஒன்றில் குளிருடன் ஏறி அமர்ந்தது.

மேலே அண்ணாந்து பார்த்தது, முயல். அங்கே சிங்கம் நின்று கொண்டிருந்தது.

''என்ன தேடிப்பிடிச்சிட்டியா சிறுவா?'' என்று கேலியாகக் கேட்டது.

''ஏய், நாட்டை ஆள்வதற்கு உடம்பு, பெரிசா இருந்தா மட்டும் போதாதுடா, கொஞ்சம் மூளையும் வேணும்.

சுண்டக்காய் பயலே! உன்னை விட நான் எவ்வளவு பெரியவன். எனக்கு எவ்வளவு மூளை இருக்கும்? என்னையா ஏமாத்தப் பாக்கிறே படவா இங்கேயே கிட, 'அவன்' வந்து உன்னைக் காப்பாற்றுவான். நான் வர்றேன்''

முயல் வெட்கித் தலை குனிந்தது.

ஒருவர் தங்கள் தகுதிக்கு மேல் செயல்பட்டால் இந்த நிலைதான் வந்து சேரும் என்பதை முயல் உணர்ந்து கொண்டது.

●

5. பூவரசன்

''டே, என்னையும் சேர்த்துக்கங்கடா...'' கெஞ்சினான், பூவரசன்.

''போடா, நீ வேண்டாம். வேண்டவே வேண்டாம்.'' என்று கண்டிப்பாக மறுத்தான், மணிவாசகன்.

''டே, குமணன், நீயாவது அவன் கிட்டே சொல்லி சேர்த்துக்கச் சொல்லுடா...'' பூவரசன் அவனிடம் வேண்டினான்.

''டே, வாசகன் போகட்டும்பா... இன்னைக்கு மட்டும் சேர்த்துக்கலாண்டா!... இவனும் நம்ப வகுப்பிலே தானேடா படிக்கிறான்...''

''அதெல்லாம் வேண்டாம். அவனைச் சேர்க்கிறதா இருந்தா நான் வர்லே...'' என்றான் வாசகன்.

மணி வாசகனை யாரும் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. காரணம், அவன் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. வீட்டுப் பையன்.

தினமும் அவனோடு சேர்கிற எல்லாருக்கும் பிஸ்கெட், சாக்லெட், ஆப்பிள் என்று கொடுப்பவனாயிற்றே! எப்படி அவனை அவர்கள் ஒதுக்க முடியும்?...

''இதோ பார் பூவரசன், நாங்கள் விளையாடுவதை நீ இங்கேயே உட்கார்ந்து பார்த்துகிட்டு இரு.'' அப்புறம் உன்னையும் ஒரு ஆட்டம் சேர்த்துக் கிறோம்'' என்றான் சமாதானமாக, முகிலன்.


பூவரசன் மேற்கொண்டு எதுவும் பேச முடியாததால் ஏக்கத்தோடு அவர்களையே பார்த்துக் கொண்டி ருந்தான்.

''டே, கறுப்பா இன்னும் ஏண்டா இங்கே நிற்கிறே? போயேன் ஓரமா... நாங்க விளையாடப் போறோம். உன்னைத் தொட்டாலே கறுப்பு எனக்கு. ஒட்டிக் கொள்ளும் என்பதாலே தானே உன்னை நான் விளையாட்டிலேயே சேர்க்க வேண்டான்னு சொன் னேன். போடா அப்பாலே...'' என்று சத்தம் போட்டே சொன்னான்.

''டே, வாசகன், நீ சிகப்பா இருக்கேன்னு ஏண்டா தினமும் அவனை இப்படி கேலி பண்றே? இனியும் இதுபோல பேசாதே!'' என்ற முகிலனைத் தொடர்ந்து, எழிலன், ''ஆமாண்டா மணிவாசகம் அவனும் நம்மல போலதானே, நம்ம வகுப்புதானே...''

''அப்படித்தான் பேசுவேன். நீங்க ஒண்ணும் எனக்கு சொல்ல வேணாம். விளையாட வர்றதா இருந்தா வாங்க...'' இல்லை நான் போறேன்...''

''வேண்டாண்டா வாசகன். இதோ இரு; ரெண்டு நிமிடத்திலே கோடு போட்டுடுறேன்...'' என்றான். அவசர அவசரமாக முகிலன்.



அடுத்த நொடியே கோடும் போட்டு முடித்தான்.

''நீங்க மூணுபேரும் என்னோட வாங்க... எழிலன் நீங்க நாலு பேரும் அந்தப் பக்கம் போங்க... சரிதானே!...'' என்றான், மணிவாசகன்.

''சரிடா, யார் தொடங்குகிறது?'' கேட்டான், குமணன்.

''இந்தா காசு நீயே போடு...''

''இல்ல வாசகன், நீயே போடு...''

''அப்படியா? சரி, பூவா, தலையா?...''

''தலை...''

கையில் இருந்த ஐம்பது காசு நாணயத்தைச் சுண்டி தலைக்கு மேலே போட்டான்.

''தலைதான்...''

''சரி. நீங்களே தொடருங்க...'' என்றான், மணி வாசகன்.

அடுத்த நிமிடமே அங்கே 'சடுகுடு' விளையாட்டு கலகலப்பாகத் தொடங்கியது.

ஆனால், பூவரசன் மட்டும் ஏக்கத்தோடு அவர்கள் விளையாடுவதையே பார்த்துக் கொண்டு அமர்ந்து இருந்தான்.

◆

நாளை ஜனவரி முதல் நாள்.

மணிவாசகன் மகிழ்ச்சியோடு இருந்தான்.

அவனைச் சுற்றி அவன் வகுப்பு நண்பர்களும், தெரு நண்பர்களும் கூடி இருந்தார்கள்.

பெருமையோடு புத்தாண்டிற்கு அவன் தந்தை வாங்கிக் கொடுத்திருந்த பட்டாசுகளை எல்லாம் நண்பர்களுக்கு காண்பித்துக் கொண்டிருந்தான்.

எல்லோரும் அவைகளை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''மணிவாசகன் இது என்ன வெடிடா!...'' முகிலன்தான் கேட்டான்.

''இலங்கை வெடி.... மழை பெய்யும் போது கூட தண்ணீர்ப் பட்டாக் கூட இது வெடிக்குமாம். பயங்கர மாக சீறிப்பாயுமாம். விலை எவ்வளவு தெரியுமா?...''

''ஐந்து ரூபய் இருக்குமா?'' கேட்டான் எழிலன்.

''அடப்போடா!... ஐம்பது ரூபாயாக்கும்.'' பெருமையுடன் சொன்னான், வாசகன்.

''இந்த ஒரு வெடியா?...'' என்றான் வியப்புடன், முகிலன்.

''இருபது வெடி... அட மக்கு ஒரு வெடி தான் ஐம்பது ரூபாய்!...''

''இந்த வெடியை நாங்க நாளைக்கு வந்த பிறகுதான் நீ வெடிக்கணும்.'' என்று கேட்டுக் கொண்டான், சீராளன்.

''ஆமாண்ட்டா வாசகன் நாங்க இது வெடிச்சதை பார்த்ததே இல்ல. அதுசரி, நீ நாளைக்கு எத்தனை மணிக்கு எழுந்திருப்பே?''

''காலையிலேயே, ரெடியாகிடுவேன். நீங்களும் வந்துடுங்க. நாம எல்லாம் மாடிக்குப் போய் வெடிப் போம்.

''சரிடா. அப்ப நாங்க இப்ப வீட்டுக்குப் போறோம்.'' என்றபடியே யாவரும் அவனிடம் விடை பெற்று அவரவர் வீட்டிற்குப் போனார்கள்.

◆

''டே முகிலா, மாணிக்க வாசகத்துக்கு வெடி கையிலே வெடிச்சிடுச்சாமே... நீ போய் பாத்தியா?... என்று பூவசரன் வருத்தமாய் கேட்டான்.

''பார்க்கும்படியாவாடா அவன் கையிருக்கு?... அப்படியே கரிக்கட்டை மாதிரியல்லவா இருக்கு?...'' என்றான், முகிலன்.

''அடப்பாவமே!'' என்றான் உண்மையான அன்புடன், பூவரசன்.

''இப்ப நீ எங்கேடா போறே?...'' கேட்டான், எழிலன்.

''மணிவாசகனைப் பார்க்கத்தான் போறேன். நீங்களும் வர்றீங்களா?'' என்று கேட்டான், பூவரசன்.

''நாங்க வர்லே, பட்டம் விடப் போறோம், நீயும் வர்றீயா?...'' கேட்டான், சீராளன்.

''பாவண்டா! நான் அவனைப் போய் பார்த்துட்டு வர்றேன். நீங்கப் போங்க''

''டே, நீ அறிவில்லாதவண்டா. உன்னைத் தான் அவனுக்குப் பிடிக்காதேடா... விளையாடும் போது கூட என்னைக்காவது உன்னைச் சேர்த்து இருக்கானா? அப்படிப் பட்டவனைப் பார்க்கப் போறேங் கிறீயே?...'' என்று கேட்டான், முகிலன்.

''என்னை அவனுக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, எனக்கு அவனைப் பிடிக்கும். நம்ம வகுப்புடா அவன்.

நம்மோடு படிக்கிறான். அவனுக்குத் துன்பம்ன்னா பார்க்காம இருக்கலாமா? நீங்க பட்டம் விடப் போங்க, நான் போய் வர்றேன்'' என்று கூறிவிட்டு வாசகனைப் பார்க்கப் போனான், பூவரசன்.

மாடி அறை ஒன்றில் மணிவாசகன் அமர்ந் திருந்தான்.

கதவு லேசாக திறந்து இருந்தது.

தன் கையைப் பார்த்தபடியே இருந்தான்.

மேலே ஒன்றும் பக்கத்தில் ஒன்றுமாக மின் விசிறிகள் சுழன்று கொண்டிருந்தன..

மாடிக்கு வந்த பூவசரன் மெல்லக் கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தான்.

கதவு திறக்கும் ஒலி கேட்டதுமே மணி வாசகன் திரும்பிப் பார்க்கத் தவறவில்லை.

''பூவரசன் நீயா?...'' என்று வியப்புடன் கேட்டான்.

''ஆமாம் வாசகன்!...''

''ஏன் அங்கேயே நிற்கிறே? உள்ளே வா...'' என்று வாசகன் அழைத்ததும் வந்தான் பூவரசன்.

''வாசகன் இப்போ எப்படி இருக்கே?...''

''இதோ இப்படித்தான் இருக்கேன்...'' என்று தன் வலது கை மீது இருந்த தேங்காய் எண்ணெய் தோய்த்த துணியை விலக்கினான்.

கண்ணங்கறேல் என்று இருந்தக் கையைப் பார்த்ததும் வேதனைப் பட்டுப் போனான், பூவரசன்..

''எவ்வளவு அழகா, சிவப்பா இருந்த கை இப்ப இப்படி கறுப்பா ஆயிடுச்சே!...'' என்று வருத்தப் பட்டவன் அவனது கறுப்புக் கையைத் தொட்டுப் பார்த்தான்.

''உன்னைத் தொட்டா கறுப்பு ஒட்டிக்குமுன்னு கேலி பண்ணினேன். இப்ப நீயே வந்து என்னைத் தொட்டுப் பார்க்கிற அளவுக்கு ஆளாகியிட்டேன். என் கை இப்ப கறுப்பா இருக்கேன்னு வெட்டியா போட்டுட முடியும்? பிறரை எந்த நிலையிலேயும் கேலியும், கிண்டலும் செய்யக் கூடாதுன்னு இப்ப நான் நல்லாவே உணர்ந்திட்டேன், பூவரசன், உணர்ந்திட்டேன்!...

''மனசுதான் கறுப்பா இருக்கக் கூடாது. உடம்பு எப்படியும் இருக்கலாமுன்னு, நம்ம வகுப்பு ஆசிரியர் சொன்னது இப்பதான் எனக்குப் புரிஞ்சுது. நல்லாவே உணர்ந்துட்டேன்.

''பூவரசன், உன்னை நான் பல நாள் கேலி பண்ணி யிருந்தும் இப்ப என்னைப் பார்க்க வந்து இருக்கியே, அதுக்கு ரொம்ப நன்றிடா!'' என்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு கண்கலங்கினான்.

''டே, என்னடா இது எல்லாம்? நட்புக்கு ஏதுடா நிறம், மதம், சாதி எல்லாம்?'' என்றான், பூவரசன்.

''உண்மைதாண்டா! அதை நான் இப்ப நல்லாவே உணர்ந்திட்டேன்.'' என்று கூறி மணிவாசகன் எதிர்ச்சுவரை நோக்கினான்.

அங்கே -

கறுப்பு - வெள்ளை - சாம்பல் இப்படி பல நிறத்தில் பூனைக்குட்டிகள் ஒன்றாகக் கூடி விளையாடுவது போன்ற படக் காலண்டர் காற்றில் ஆடிக் கொண்டி ருந்தது.

அந்தப் பேசாத படம்தான் மணிவாசகனுக்கு எவ்வளவு பொருளை உணர்த்தி விட்டது.

6. அப்பாவுக்கு காலுண்டு!

முருகன் பதிவாளர் அலுவலகத்தில் பணி புரிபவன், இளைஞன். தனியறை ஒன்றில் தங்கி இருக்கிறான்.

வேலை நேரம் போக மீதி நேரத்தில் அவனை தனித்தே பார்க்க முடியாது.

அவனைச் சுற்றி பக்கத்து வீட்டு, எதிர் வீட்டுக் குழந்தைகளே சூழ்ந்து இருக்கும்.

சனி, ஞாயிறு என்றால் சொல்லவே வேண்டாம் போங்கள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை!

அவனைச் சுற்றி கூட்டம் நிரம்பி இருந்தது.

''மாமா, ஒரு கதை சொல்லுங்க!'' என்றான் மாமல்லன்.

''வேண்டாம் மாமா, விடுகதை சொல்லுங்க...'' என்றாள், குறள் நிலா.

ஆளுக்கொன்று சொன்னார்கள்.

நிறைய பேர் கதை சொல்லும்படி கேட்டதால் அதையே சொல்வதென்று முடிவு செய்தான் முருகன்.



''சரி, சொல்லட்டுமா?...'' என்று கேட்டான்.

''ம்...'' என்று எல்லாரும் சொன்னதும், முருகன் சொல்லத் தொடங்கினான்.

''அவளுக்கு மோகனான்னு பெயர். வயது மூணு; படு சுட்டி, எல்.கே.ஜி. படிக்கிறாள்.

அவுங்க அப்பா ரயில்வே வேலையிலே இருக்காரு. நல்லவரு. அவுங்க அம்மாவும் நல்லவங்க.

''பள்ளிக் கூடத்துல சேர்றதுக்கு முன்னே எல்லாம் பக்கத்து வீட்டுக் குழந்தைங்க பள்ளிக்கூடம் போகும் போது இவளும் ஒரு பையை எடுத்துக்கிட்டு, அதுலே ஏதாவது ஒரு வாரப் பத்திரிகையை போட்டுக்கிட்டு

கிளம்பிடுவா. அவுங்க அம்மா அனுப்பலேன்னா அழுவா. அப்படி ஒரு ஆர்வம் படிப்பிலே அவளுக்கு.

இப்ப சொல்லவே வேண்டாம். ஏழு மணிக்கே பள்ளிக்குக் கிளம்பிடுவா. சிலேட்டை எடுத்து நாலு முறை தண்ணீர் விட்டு கழுவுவா, ஏ, பி, சி, டின்னு எழுதுவா... அ, ஆவன்னா எழுதுவா... பள்ளிக் கூடத்தில் சொல்லிக் கொடுக்கும் பாட்டை எல்லாம் பாடி வீட்டில் ஆடுவா...

அப்படித்தான் ஒரு நாள் மாலையிலே குட்டிச் சேர்ல உட்கார்ந்து எழுதிகிட்டு இருந்தா, எழுதுனத அவுங்க அம்மாகிட்ட கொண்டு போய் காட்டுனா மோகனா. எழுதியிருந்தது தப்பா இருந்ததாலே... 'தப்பா எழுதி இருக்கே, போய் நல்லா எழுதிகிட்டு வா'ன்னு சொன்னதுக்கு... ''போ... உனக்குத் தெரியாது...'' அப்பா தான் அறிவாளி. நான் அப்பா கிட்டே கேட்டுக்கிறேன்.' என்று சொல்லி விட்டு அவுங்க அப்பாகிட்டே போனாள்.

''அப்பா... நான் எழுதியிருக்கேன்... அம்மா தப்புன்னு சொல்றாங்க''...ன்னு சொன்னாள்.

பேப்பர் பாத்துகிட்டு இருந்த அவுங்க அப்பா உடனே மோகனா எழுதியிருந்ததை வாங்கிப் பார்த்தார்.

அவள் என்ன எழுதியிருந்தா தெரியுமோ?... அப்ப, அம்ம, அக்க-ன்னு எழுதியிருந்தா.

அவள் எழுதியிருந்தது தப்புன்னு அவருக்குத் தெரியும். இருந்தும் சொன்னார்.

''மோகனா, நீ அழகா எழுதி இருக்கியே. இதையா அம்மா நல்லா இல்லேன்னு சொன்னாங்க?'' என்று அவளுக்கு ஆதரவாய் கேட்டார்.

'ஆமாப்பா! அம்மா மக்கு...?'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

இவள் எழுதியிருக்கும் தப்பை எப்படி சுட்டிக் காட்டுறதுன்னு கொஞ்ச நேரம் யோசனைப் பண்ணினார்.

'அப்படித்தான் செய்யணுமுன்னு முடிவு பண்ணி மோகனா கிட்டே மெல்ல பேச்சை ஆரம்பிச்சார்.

''இதோ பார் மோகனா... நீ எழுதியிருக்கே... நான் ஒண்ணு கேப்பேன். நீ பதில் சொல்லணும். சரிதானே'.

அதுக்கு அவளும் 'சரி'ன்னாள்.

''அப்பாவுக்கு காலு இருக்கான்னு கேட்டார். அதுக்கு அவ, 'ஆமாம் இருக்குன்னா.

அப்புறம் அம்மாவுக்கும், அக்காவுக்கும் காலு இருக்கான்னு கேட்டார்.

உடனே அவளும் இருக்குன்னா.

இங்கே அப்பான்னு எழுதறதுக்கு நீ 'அப்ப'ன்னு எழுதியிருக்கே. அப்பாவுக்குத் தான் காலு இருக்கே.

அதனாலே இங்கே ஒரு காலை இப்படி 'ா' என்று போட்டுக் காட்டினார். அம்மாவுக்கு காலு இருக்குல்ல அதனால 'அம்ம'ன்னு எழுதியிருக்கேப் பாரு, இங்கே இப்படி 'ா' ஒரு காலப் போடணும் - என்று அவர் சொல்லிக் கொண்டு வரும்போதே, மோகனா சொன்னா, அக்காவுக்கும் காலு இருக்கு என்றாள்.

''ஆமாம், அதனாலே 'அக்க'ன்னு எழுதியிருக்க பாரு, இங்கே ஒரு காலு போடனும். சரிதானே!'' என்று போட்டு விட்டுக் கேட்டாரு...

அதுக்கு அவ உடனே, ''ம்... எனக்கு தெரிஞ் சிடுச்சி... சிலேட்டைக் கொண்டாப்பா நான் போயி எழுதிட்டு வர்றேன்'' என்று வாங்கிக் கொண்டு திண்ணைக்கு ஓடினாள்.

மெல்ல சிரித்துக் கொண்டே அவள் அப்பா மீண்டும் பேப்பரை பார்க்க ஆரம்பிச்சுட்டார்.

மோகனா திண்ணையிலே உட்கார்ந்து அம்மா, அப்பா, அக்கா, தவளை, கரடி, புலி, சிங்கம் என்று எழுத ஆரம்பிச்சு, சிலேட்டு நிறைய, புத்தகத்திலே இருந்ததை எல்லாம் எழுதி எடுத்துக்கிட்டு வந்து அவுங்க அப்பா அம்மாகிட்டே காட்டினா... அதைப் பார்த்ததும் அவருக்கு ஒரு புறம் சிரிப்பு, மறு புறம் வியப்பு!...

'என்னப்பா நல்லா எழுதி இருக்கேனா?ன்னு கேட்டா.

அவருக்கு என்ன சொல்றதுன்னு ஒண்ணுமே புரியிலே... இருந்தாலும் சொன்னாரு!... மோகனா அம்மா, அப்பா, அக்கா எல்லாம் நல்லா எழுதி இருக்கே...

தவளை, கரடி, புலி, சிங்கம் எல்லாத்துக்கும் ஏம்மா இப்படி 'ா' கால் - அதாவது தவ்ளை'ா'ன்னு போட்டு இருக்கேன்னு கேட்டாரு.

அதுக்கு அவ என்ன சொன்னா தெரியுமா?...

அம்மா, அப்பா... தவளைக்கு கால் இருக்கு, கரடி, புலி, சிங்கத்துக்கும் கால் இருக்கு அதான் போட்டேன். நீங்கதானே காலு இருந்தா காலு போடச் சொன்னீங்க. அதுக்குள்ள மறந்துட்டீங்களா?...! என்றாளே பார்க்க லாம். அவருக்கு வந்த சிரிப்பை அடக்கவே முடிய வில்லை.'' என்று முருகன் கூறி கதையை நிறுத்தியதும் அவனைச் சுற்றி அமர்ந்திருந்த அத்தனைக் குழந்தை களும் சிரிப்பை அடக்க முடியாமல் வாய் விட்டே சிரித்தார்கள்.

இதைப் படித்த உங்களுக்கு சிரிப்பு வர வில்லையா?...

●

7. டி.வி. வேண்டாம்ப்பா!

அந்தக் காலனி முழுதுமே ஒரே கலகலப்பு. இதுவரை ஐந்து வீட்டிலும் டி.வி. இல்லை. இப்போது முதன் முதலாக ராஜா வீட்டிற்கு வந்து இருக்கிறது.

அவன் மனைவி கனகாவின் முகத்திலெல்லாம் மகிழ்ச்சிப் பூக்கள். பெருமையோடு எல்லார் வீட்டை யும் பார்வையால் அளந்தாள். அவள் உள்ளம் பூரிப்பால் பெருத்தது.


கையிலும், கழுத்திலும் கொஞ்சம் சுமை குறைந் திருந்தது. இருந்தாலும் பெருமை தாளவில்லை.

அன்று ஒலியும், ஒளியும் ஓடிக் கொண்டிருந்தது.

பக்கத்து வீட்டுக்காரர்கள் வெளியிலும், சன்னல் ஓரம் நின்றும் ஆர்வத்தோடு எட்டிப் பார்க்கவே, கனகா பெருமையோடு யாவரையும் உள்ளே அழைத் தாள்.

சிலர் சென்றார்கள், சிலரைத் தன்மானம் தடுத்து நிறுத்தியது.

ராஜாவோடு பணிபுரியும் பக்கத்து வீட்டு மணி அலுவலகம் புறப்பட்டுக் கொண்டு இருந்தான்.



மகன் குமார் ஓடி வந்தான். ''அப்பா அசோகன் வீட்டில் டி.வி. வாங்கிட்டாங்க நீங்க எப்ப வாங்கப் போறீங்க?''

''பொறுமையா இருப்பா, ஆபிசிலே வாங்கின கடனெல்லாம் அடையட்டும். வாங்கலாம்...''

''ஆமாம். தினமும் இதையே தான் சொல்றீங்க! சரி. பள்ளிக்கு நேரமாச்சி நான் வர்றேன்'' என்றவாறு குமார் போனான்.

◆

ஒரு மாதமாயிற்று...

தன் வகுப்புத் தோழன் அசோகனிடம் குமார் கேட்டான். ''ஏண்டா. இப்போல்லாம் அழுக்குச் சட்டைப்

போட்டு வந்து தினமும் டீச்சர் கிட்டே அடி வாங்கறே? நல்ல 'டிபன்' கூட கொண்டு வர மாட்டேங்குற? இந்த மாத ஸ்கூல் பீஸ்கூட இன்னும் கட்டல போலி ருக்கே?...''

''ஆமாண்டா! அம்மா, அப்பாகிட்டே கேட்டா தர்றேன். தர்றேங்கிறாங்க. நான் இங்கே அடி வாங்க வேண்டிருக்கு... சரி, பெல்லடிக்கப் போவுது, வா!...''

◆

''இந்தப் பணத்திலே மளிகைக் கடைக்கு, பாலுக்கு, மண்ணெண்ணைக்கு, பூக்காரிக்கு, வாடகைக்கு எல்லாம் எப்படி கொடுக்கிறது?...'' பொரிந்து தள்ளினாள் ராஜாவின் மனைவி கனகா.

''சலவைக் கணக்கை, முடி வெட்டும் கணக்கை, ஸ்கூல் பீஸ், பேப்பர் கணக்கு விட்டுட்டியே இதையும் சேர்த்துக்க...''

அவனையே முறைத்துப் பார்த்தாள், கனகா.

''ஏய், இந்த முறைப்பெல்லாம் கடனா வாங்க வேண்டாம். போனஸ் வரும்போது வாங்கிக்கலா முன்னு சொன்னப்பக் கேட்டியா? நான் சமாளிச்சிக் கிறேன். உடனே டி.வி. வேணும்'னியே அப்ப இருக்கணும். வட்டிக் கொடுத்துப் போக மீதிப் பணத்தை அப்படியே கொடுத்துட்டேன். அப்புறம் நான் என்ன செய்றது?...''

இவர்கள் பேசுவதையே டி.வி.யைப் பார்த்துக் கொண்டிருந்த அசோகனும், குமாரும் கேட்கத் தவற வில்லை.

◆

''குமார் இங்கே வாப்பா'' அழைத்தான் மணி.

''என்னப்பா?''

''என்ன டி.வி. வாங்கலாம்.''

''போனஸ் வந்துடுச்சாப்பா?''

''இல்ல, எங்காவது கடன் வாங்கி வாங்கலாமுன்னு இருக்கேன்.''

''வேண்டாம்ப்பா இப்ப டி.வி.''

''என்ன குமார் சொல்றே?...''

''உண்மைதாம்பா. கடன் வாங்கி டி.வி. வாங்க வேண்டிய அவசியமில்லப்பா...''

மணியும் அவன் மனைவியும் மகன் சொல்லி விட்டுப் பள்ளிக்குப் போவதையே பார்த்துக் கொண் டிருந்தார்கள்.

குமாரின் கண்களில் அசோகனின் அம்மாவும், அப்பாவும் சண்டைப் போட்டுக் கொள்வதும், பள்ளி யில் அவன் 'பீஸ்' கட்டாமல், அடி வாங்குவதும், அழுக்குச் சட்டைப் போட்டு வருவதும், நல்ல 'டிபன்' கூட கொண்டு வர முடியாது இருப்பதும் நிழலாடிக் கொண்டு இருந்தன.

●

8. தங்கத்தாமரை!

ஆனந்தபுரி என்ற நாட்டை அன்பாலயன் என்ற அரசன் ஆண்டு வந்தார்.

நீதியும், நேர்மையும் கொண்ட அரசர் அவர். அவரது மனைவியான அன்புவல்லியும் நல்லவள்.

இவர்களுக்கு நீண்ட நாட்களாக குழந்தை இல்லை. அந்தக் கவலை இருவருக்குமே இருந்தது.

ஒரு நாள் வழக்கம்போல் அரசர் வேட்டைக்குச் சென்ற போது காட்டில் ஒரு குழந்தை கிடந்தது. ஆதரவற்று அனாதையாகக் கிடந்த அந்த ஆண் குழந்தையை அரசர் அரண்மனைக்கு எடுத்து வந்தார்.

அதைக் கண்டு அன்புவல்லி, இனி இவனே என் மகன், இவனே இந்த நாட்டு இளவரசன் என்று சீராட்டி, பாராட்டி வளர்த்தாள். அதைக் கண்டு கவலை மறந்து இருந்தார் அரசரும்.

தக்க வயதில் அவனுக்கு நன்மாறன் என்று பெயர் சூட்டு விழாவும் நடத்தி, நாட்டு மக்களுக்கு விருந்தும் வைத்தார் அரசர்.

நாட்டு மக்களும் அவனையே தங்கள் இளவரசர் என்று எண்ணி மகிழ்ந்தனர்.



இளவரசன் நன்மாறனுக்கு கல்வி பயிற்சியும் வாள், வில் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு, அவனும் அவற்றில் தேர்ச்சி பெற்றவனானான். வயதும் பதினான்காகியது.

இந்த நிலையில் அரசி அன்புவல்லி கருவுற்றாள். அதைக் கண்டு அரசரும் மகிழ்ந்தார். குறிப்பிட்ட நாளில் ஆண் குழந்தை ஒன்றையும் பெற்றாள்.

அவனும் வளர்ந்தான். அவனுக்கு மகிழ்நன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

நன்மாறனும், தன் தம்பியான மகிழ்நனோடு, ''தம்பி... தம்பி!... என்று அன்போடு அரவணைத்து மகிழ்ந்து போற்றி வந்தான்.

அரசருக்கு வயதாகிக் கொண்டிருந்ததால், தன் மகன்களில் பெரியவனான நன்மாறனுக்கு பட்டம் சூட்ட விரும்பினார்.

இத்தனை ஆண்டுகள் அமைதியாக இருந்த அன்பு வல்லி, தன் சொந்த மகனுக்கு இளவரசன் பட்டம் போய் விடுமே என்பதால், நன்மாறன் மீது கோபம் கொண்டாள்.

தன் மகனுக்கு பட்டம் சூட்டுங்கள் என்றால், அரசர் பெரியவன் இருக்க சிறியவனுக்கு பட்டம் சூட்டுவதா? என்று கூறிவிடுவார் என்பது அரசிக்குத் தெரியும்.

அதனால், எப்படியாவது, அவனை ஒழித்துக் கட்டினால்தான், தன் மகனுக்கு பட்டம் கிடைக்கும் என்று எண்ணினாள், அரசி.

நன்மாறனை எப்படி ஒழிப்பது?...

அரண்மனை மருத்துவரை அழைத்தார்! அவர் கை நிறைய பணத்தை அள்ளிக் கொடுத்தாள்.

தன் எண்ணத்தைக் கூறினாள்.

''மருத்துவரே! நீர் என்ன செய்வீரோ தெரியாது. நன்மாறன் இறக்க வேண்டும் என் மகன் பட்டம் சூட்ட வேண்டும். அதற்கு நீர்தான் உதவி செய்ய வேண்டும். இது விசயம் அரசருக்குத் தெரியக் கூடாது'' என்றாள்.

கை நிறைய பணத்தைப் பெற்ற மருத்துவர் சிந்திக்கத் தொடங்கினார்.

''அரசியே! நான் அவனை ஒழித்துக் கட்டுகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் சொல்வதை மட்டும் நீங்கள் செய்தால் போதும்...'' என்றார்.

''நான் என்ன செய்ய வேண்டும்? என் மகனுக்காக நான் எதையும் செய்கிறேன். சொல்லுங்கள்'' என்றாள்.

''அரசியே! தங்களுக்கு கடும் ஜுரம் என்று அரசரிடம் சொல்லுங்கள். அரசர் என்னை அழைப்பார் மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்...'' என்றார்.

அடுத்த நாள், மருத்துவர் சொன்னது போல் அரசி, அரசனிடம் தனக்கு கடும் ஜுரம் என்று சொன்னாள். உடனே மருத்துவர் அழைக்கப்பட்டார்.

''அரசியே விஷ ஜுரம் தாக்கியுள்ளது. உடனே சிகிச்சை அளிக்காவிட்டால் உயிருக்கே ஆபத்தாக முடிந்து விடும்.'' என்றார்.

அரசர் பதறியபடியே, ''மருத்துவரே! உடனே சிகிச்சையைத் தொடங்குங்கள்...'' என்றார்.

''அரசே! மன்னிக்க வேண்டும். இந்த நோய்க்கு நம் நாட்டு மூலிகைகளால் குணம் கிடைக்காது. நெருப்பு மலை என்று ஒரு மலை இருக்கிறது. இது தெற்கே வெகு தூரத்தில் இருக்கிறது. இந்த மலையின் மேலே ஒரு சுனை இருக்கிறது. அந்த சுனையில் தங்க நிற தாமரை ஒன்று இருக்கிறது. அதைக் கொண்டு வந்து,

அதன் சாற்றை மூன்று பொழுது நெற்றியில் பிழிந்து விட்டால்தான் இந்த நோய் குணமாகும்.'' என்றார்.

''உடனே ஏற்பாடு செய்யுங்கள்.'' என்றார் அரசர்.

''அரசே அது அவ்வளவு எளிதல்ல. அந்த மலையை அடைய வேண்டுமானால் பல விலங்குகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். மேலும், உடலில் எந்த வித தழும்பும் இல்லாத திருமணமாகாத, பதினாறு வயதிற்கு உட்பட்ட இளைஞனே அம்மலரைக் கொண்டு வர முடியும்.'' என்றார் மருத்துவர்.

''தந்தையே, மருத்துவர் சொன்ன அனைத்து தகுதியும் எனக்கு இருக்கிறது. அன்னையின் நோய் குணமாக எல்லா இடர்களையும் தாண்டி நானே போய் வருகிறேன். எனக்கு விடை கொடுங்கள்'' என்றான் நன்மாறன்.

''மகனே நன்மாறா! நீ நினைப்பது போல் தங்கத் தாமரையைக் கொண்டு வருவது எளிதல்ல. நீ போக வேண்டாம்...'' என்றார் அரசர்.

''தந்தையே! என் அன்னை உயிர் மீட்க என்னுயிர் போனாலும் எனக்குக் கவலை இல்லை'' என்றான் நன்மாறன்.

அரசியும், மருத்துவரும் உள்ளுக்குள் மகிழ்ந்து கொண்டனர்.

◆

இளவரசன் நன்மாறன் தங்கமலர் பறிக்க மலை நோக்கிப் பயணமானான்.

கொடிய விலங்குகளையும், அடர்ந்த காடுகளையும் கடந்து, நெருப்பு மலையை அடைந்தான் நன்மாறன்.

நெருப்பு மலை சூடாகவே இருந்தது. ஒரே மூச்சில் அதன் உச்சியை அடைந்தான். சுனையை நெருங்கினான். அங்கே...

தங்கமலரைச் சுற்றி பெரிய பச்சைத் தவளைகள் இரண்டு காவல் காத்துக் கொண்டிருந்தன.

ஒவ்வொன்றும் வாய் பிளந்து நாக்கை நீட்டும் போது நெருப்புக் கதிர்கள் எரிந்தன. ஒரு நிமிடம் அதைக் கண்டு நன்மாறன் பயந்து போனான்.

தவளைகளின் கண்ணில் படாமல் ஒரு பாறையில் ஒளிந்து கொண்டான். சிந்தித்தான். இவைகளை எப்படி சாகடிப்பது?...

தோளில் இருந்த வில்லையும், அம்பையும் தொட்டுப் பார்த்தான். அடுத்த நொடியே அதை எடுத்தான்.

அம்பை எடுத்து, வில்லில் வைத்து ஒரு தவளையின் விழியைப் பார்த்து நாணை இழுத்தான். மலையே அதிரும்படி கத்தியபடியே கரையில் வந்து விழுந்து இறந்தது.

அடுத்து இருந்த தவளை அது இறந்ததைக் கண்டு சுனை நீரில் அங்குமிங்கும் அலைந்தபடி வாயைத் திறந்து நெருப்பைக் கக்கிக் கொண்டிருந்தது.

இதுதான் சமயம் என்று அம்பொன்றை எடுத்து வில்லில் வைத்துக் குறி பார்த்தான்.

தவளை வாய் பிளந்து நெருப்பைக் கக்கும் போது குறி பார்த்து நாணை இழுத்தான். அந்தத் தவளையும் வாய் பிளந்த நிலையில் கரைக்குத் தாவி உயிர் விட்டது.

வேறு ஏதும் ஆபத்துகள் இருக்கிறதா என்று பாறை மறைவிலிருந்து வெளிப்பட்டு பார்த்தான். ஒன்று மில்லை என்பதை உணர்ந்தான்.

சுனையில் இறங்கி தங்கத் தாமரையைப் பறித்தான்.

இதுவரை தாயின் நிலை எப்படி இருக்கிறதோ என்று வேக வேகமாக திரும்பிக் கொண்டிருந்தான்.

காடுகளைத் தாண்டி வந்து கொண்டு இருக்கும் போது இடையில் காட்டாறு பெருக்கெடுத்து வரத் தொடங்கியது. திகைத்துப் போனான் நன்மாறன்.

எப்படி இந்த ஆற்றைத் தாண்டி அன்னையிடம் போவது என்று கலங்கியபடியே கரையில் நின்றி ருந்தான்.

அப்போது காட்டாற்றில் வந்து கரையில் ஒதுங்கி நின்ற முதலை ஒன்று நன்மாறனைப் பார்த்து விட்டது. நன்மாறனும் அதைப் பார்த்து விட்டான்.

நாம் தங்க தாமரையைக் கொண்டு போவதற்குள் இந்த முதலை நம்மை அடித்து கொன்று விடுமோ என்ற அச்சம் உள்ளத்தில் எழுந்ததால் மேலும் கலங்கிப் போனான் நன்மாறன்.

முதலை நன்மாறனை உற்றுப் பார்த்தபடியே அவனை நோக்கி நகர்ந்து வந்தது.

இன்று நாம் செத்தோம் என்ற எண்ணத்தில் ஓடத் தொடங்கினான். அதைக் கண்ட முதலை, ''இளைஞனே! பயப்படாதே. நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். யாருமே வர அஞ்சும் இந்த இடத்திற்கு நீ ஏன் வந்தாய்? சொல், முடிந்தால் உதவுகிறேன்...'' என்றது முதலை.

அதன் வார்த்தைகளைக் கேட்டு கொஞ்சம் பயம் நீங்கிய நன்மாறன் தன் தாயின் உடல் நிலை குறித்தும், அதற்காக தங்கத்தாமரை பறிக்க வந்தது குறித்தும் சொன்னான்.

''உன் தாயின் பாசத்தை மெச்சுகிறேன். நீ பயப்படாமல் என் மேலே ஏறிக் கொள். உன்னை அக்கரையில் விட்டு விடுகிறேன்...'' என்றது முதலை.

அடுத்த நொடியே, தங்கத்தாமரையை ஒரு கையில் ஏந்தியபடியே அதன் மீது ஏறி நன்மாறன் அமர்ந்தான்.

காட்டாற்று வெள்ளத்தில் முதலை இறங்கி எதிர் நீச்சல் போட்டு நீந்திக் கரையை அடைந்தது.

கரையை அடைந்த நன்மாறன் மகிழ்ச்சியோடு, ''முதலை நண்பனே! உன் உதவிக்கு மிக்க நன்றி!'' என்றான்.

''நல்லது இளைஞனே! ஒரு தாய்க்குச் செய்யும் உதவி, கடவுளுக்கு செய்யும் காரியம் போன்றது. அந்த வகையில் நான் மகிழ்ச்சியடைகிறேன். விரைந்து சென்று உன் தாயைக் காப்பாற்று'' என்று முதலை கூறியது.

''மிக்க நன்றி நண்பரே!'' என்று நன்மாறன் கூறி விட்டு அரண்மனையை நோக்கி விரைந்து செல்லத் தொடங்கினான்.

◆

அரண்மனையில்...

அரசி அன்புவல்லியும், மருத்துவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

''மருத்துவரே! நன்மாறன் தங்கத் தாமரையை எடுத்து வரச் சென்று இன்றோடு பத்து நாள் ஆகி விட்டது.''

''அரசியாரே! தங்கள் எதிரி ஒழிந்து இன்றோடு பத்துநாள் ஆகி விட்டது என்று சொல்லுங்கள். அதுதான் பொருத்தமானதாக இருக்கும்...'' என்றான் நமட்டுச் சிரிப்போடு மருத்துவன்.

''அப்படியா சொல்கிறீர்கள்? என்றாள் அரசி.

''ஆம் அரசி! தங்கத் தாமரையைக் கொண்டு வருவது அப்படி ஒன்றும் எளிதல்ல. அதை அடையும் வழியில் ஏகப்பட்ட கொடிய விலங்குகள் இருக்கும். அவைகளை சமாளித்து நெருப்பு மலையை அடைந்தால், தங்கத் தாமரை இருக்கும் சுனை நீரில் அதற்குக் காவலாக யானையின் தலை அளவில் இரண்டு பச்சைத் தவளைகள். அவைகள் வாய் பிளந்தால் நெருப்புத் துண்டங்களாக விழும். யாராவது தாமரையைப் பறிக்க முனைந்தால் அவைகள் நெருப்பு நாக்கை நீட்ட அதில் அவர்கள் கரியாக தீய்ந்தே போவார்கள். பாவம் நன்மாறன் தீய்ந்து போனானோ இல்லை விலங்குகளுக்கு இரையாகிப் போனானோ யார் கண்டது...'' என்றான் மகிழ்ச்சியோடு மருத்துவன்.

அதைக் கேட்டு அரசி அன்புவல்லி ''இப்போது தான் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது மருத்துவரே! இனி என் மகன் மகிழ்நன் பட்டம் சூட்ட யாரும் தடை சொல்ல முடியாது அல்லவா?'' என்று கேட்டாள்.

''அரசரே மறுப்பு சொல்ல முடியாதே. அமைச்சர்களும், மக்களும் சொல்ல என்ன இருக்கிறது? இப்போதே நீங்கள் அரசரைச் சந்தித்து ஒரு முடிவை எடுங்கள்...'' என்றான் மருத்துவன்.

இதுவரை இவர்கள் இருவரும் பேசிக் கொண்டதை எல்லாம் மறைவில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த அரசன்... ''ஆம் மருத்துவரே! உங்கள் இருவருக்கும் ஒரு முடிவை உடனே எடுக்கத்தான் வேண்டும்''

என்றபடியே அவர்கள் முன்னே அரசன் வந்து நின்றதும், இருவரும் திகைத்துப் போனார்கள்.

உடனே அரசன் அமைச்சர்களை அழைத்தான். ''அமைச்சர்களே! எந்தவிதப் பேச்சிற்கும் இடமில்லா மல் நான் சொல்வதை உடனே செயல்படுத்துங்கள்.

''இவர்கள் இருவரும் தேசத்துரோகிகள். என் செல்ல மகன் நன்மாறனை கொலை செய்ய எண்ணிய கொடியவர்கள். மருத்துவனை இடுக்கிக் காட்டில் உள்ள இருண்டச் சிறையிலும், எனக்கு மனைவியாக இருந்த இந்த மாபாதகியை பாதாளச் சிறையிலும் தள் ளுங்கள்.'' என்று கோபத்தோடு கட்டளையிட்டான்.

''அரசே! என்னை மன்னித்து விடுங்கள். என் பிள்ளை மீது உள்ள பாசத்தால் தவறு செய்து விட் டேன்...'' என்று அரசி அழுதாள்.

''வேசக்காரி!'' வேண்டாம் உன் பேச்சு!... இவளை உடனே இழுத்துச் செல்லுங்கள்...! என்றான் அரசன் மீண்டும்.

அதன்படியே இருவரையும் சிறையிலே அடைத் தார்கள்!

◆

அதே நேரம்...

தங்கத்தாமரையோடு நன்மாறன் அரண்மனைக்குள் நுழைந்தான். அங்கிருந்த அனைவரும் அவனை வியப்போடு பார்த்தார்கள்.

''தந்தையே! என் அன்னை எங்கே? அவர்கள் குணமடைய இதோ தங்கத் தாமரையைக் கொண்டு வந்திருக்கிறேன்...'' என்றாள் பெருமையாக.

மகனை ஆரத் தழுவிக் கொண்டு அரசி தனக்கு கடும் ஜுரம் என்று சொல்லி அவனைக் கொல்ல செய்த சதி அனைத்தையும் சொன்னதோடு, தற்போது சிறையில் அடைக்கப்பட்டு இருப்பதையும் சொல்லி முடித்தார் அரசர்.

எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்ட நன் மாறன்... ''தந்தையே! எங்குதான் பதவிகளுக்குப் போட்டி இல்லை. தாய் நினைத்ததில் தவறு என்ன இருக்கிறது? தம்பி மகிழ்நனே பட்டம் சூட்டிக் கொள் வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்... உடனேயே அன்னையை அழைத்து வரச் சொல்லுங்கள். தம்பிக்கு பட்டம் சூட்ட ஏற்பாடு செய்யுங்கள்...'' என்றான்.

''என் அன்பு மகனே! உன் நல் உள்ளம் அவளுக்கு இல்லையே! மேலும், மூத்தவன் நீயிருக்க இளையவன் மகிழ்நனுக்கு எப்படி நான் பட்டம் சூட்டுவேன்? அது ஒருக்காலும் முடியாது'' என்றான்.

''தந்தையே, தாயின் மீது கொண்டுள்ள கோபத்தால் நீங்கள் இப்படி பேசலாமா? அவர்கள் யார்? இந்த நாட்டு அரசியில்லையா? தங்கள் துணைவி யில்லையா? எங்கள் தாயில்லையா? தாங்கள் மன்னிக்கக் கூடாதா? எனக்குத் தாங்கள் பட்டம் சூட்ட

எண்ணினால், நான் துறவு மேற்கொண்டு காட்டிற்குச் சென்று விடுவேன்'' என்றான் நன்மாறன்.

அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அரசன் கண் கலங்கிய படியே ''மகனே! உன் எண்ணம் போலவே செய்கிறேன்'' என்று ஒப்புக் கொண்டார்.

அரண்மனையில் மகிழ்நனுக்குப் பட்டம் சூட்டு விழாவிற்கான ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருந்தன.

தம்பி மகிழ்நனின் பட்டம் சூட்டு விழாவிற்கான ஏற்பாட்டில் மகிழ்ச்சியோடு ஈடுபட்டிருந்தான் நன்மாறன்.

சிறையில் இருந்து அரசியும் அழைத்து வரப் பட்டாள். அரசனின் மனம் மட்டும் நன்மாறனுக்கு பட்டம் சூட்ட முடியவில்லையே என்று வருத்தப் பட்டுக் கொண்டிருந்தது.

முடிசூட்டு விழா மேடையில் அரசனும், அரசியும் வீற்றிருக்க, அருகருகே நன்மாறனும், மகிழ்நனும் அமர்ந்து இருந்தனர்.

மங்கள இசை பொங்க, அரண்மனை ஜோதிடர் அரச கிரீடத்தை எடுத்து வர அதை வாங்கி மகிழ்நனுக்கு பட்டம் சூட்ட முற்பட்ட போது ஒரு நொடியில் அரசர் கையில் இருந்த கிரீடத்தைப் பற்றி நன்மாறனின் தலையில் சூட்டினாள் அரசி.

அரசரும், அவையோரும் திகைத்துப் போய் விட்டார்கள். நன்மாறனோ - ''தாயே என்ன காரியம் செய்து விட்டீர்கள்?'' என்றான்.

''என் மகனே! இப்போது தான் நான் உனக்கு நல்ல காரியம் செய்திருக்கிறேன். பிள்ளை பாசத்தால் இந்த நாட்டிற்கு பிழை செய்ய இருந்தேன். உன் அன்பும், பாசமும், என் அறிவு விழிகளைத் திறந்து விட்டன. அதற்காகவும், உன்னை பெறாத பிள்ளையாகப் பெற்றதற்காகவும் இப்போது நான் மகிழ்ச்சி அடைகிறேன். இடையில் நான் செய்த தவறுக்காக அரசர் என்னை மன்னிக்க வேண்டும்'' என்று அவர் கால்களில் வீழ்ந்த அரசியை அன்போடு எடுத்து அணைத்துக் கொண்டார் அரசர்.

நாட்டு மக்கள் ''இளவரசர் நன்மாறன் வாழ்க!'' என்று வாழ்த்தினார்கள்.

குட்டீஸ்களா! 'நீங்களும் தன் தவறை உணர்ந்து திருந்திய அரசி அன்புவல்லியை வாழ்த்தலாமே!

●

9. கலா கலா கல கலா!...

''இங்கே வாங்கடி''... கோபத்தோடு அழைத்தாள், தாய்.

''என்னம்மா?'' என்றாள், வேணி. அவளைத் தொடர்ந்து வந்தாள், கலா.

''இனிமே உங்கத் துணிகளை நீங்களே துவச் சிங்கங்க. என்னால முடியாது...''

''அதுக்குத்தாம்மா, நான் ஒரு மாசமா சுமதி வீட்டுல வாங்கியிருக்கிறதைப் போல வாஷிங் மிஷன் ஒண்ணு வாங்கச் சொல்றேன்.'' - கலா

''உனக்குத் தாண்டி ஒண்ணும் புரியிலே... உங்க அப்பா வாங்குற சம்பளத்துல வாடகை கொடுத்து, மளிகை, பாலுக்குன்னு கொடுத்துநான் படுறதே பெரும்பாடு. இதிலே வாஷிங் மிஷின் ஒண்ணுதான் கொறச்சல்!... இதோ பாருங்கடி... அவுங்க அவுங்க துணிகளை எடுத்துக்கிட்டுப் போய் துவைங்க... இன்னைக்கு லீவுதானே?...''

''சரிம்மா...'' என்று தன் பள்ளிச் சீருடைகளையும், மற்ற துணிகளையும் எடுத்துக் கொண்டாள், வேணி.



''நீ ஏண்டி நிற்கிறே? உன் துணிகளை எடுத்துக் கிட்டுப் போக வேண்டியதுதானே?...''

''பம்புல தண்ணி சரியா வராதே. எப்படி அடிக் கிறது?'' - கேட்டாள், கலா.

''எனக்கும் அப்படித்தானே இருக்கும்? எத்தனை நாள் ஒரு குடம் தண்ணி அடிச்சிக்குடுன்னு உன்னைக் கேட்டு இருப்பேன். அடிச்சிக் கொடுத்து இருப் பியா?... அவளாவது அப்பப்ப அடிச்சிக் கொடுத்து இருக்கா. நீ எந்த வேலையும் செய்யாம படிக்கிறேன்னு 'கதை' சொல்லிகிட்டு இருக்கிறே. ஆனா காலாண்டுத் தேர்வுல கணக்கிலே இருபது மார்க் வாங்கியிருக் கிறே... டொழுதுக்கும் டி.வி. முன்னேதானே உட்கார்ந்து இருக்கே? என்ன வேலை வீட்டுல செய்ற சொல்லு?...''

''ஆமாம். உன் புராணத்தை ஆரம்பிச்சிட்டியா?...''

''நான் பேசினா உனக்கு இப்ப புராணமாத்தான் தெரியும். மத்தவங்க முன்னே அவமானப் படும் போதுதான். புரியும்.

''சரி, நீ போ...'' என்றாள், கலா.

''ஏய், அம்மாவை ஏண்டி அப்படி பேசுற?...''

''எப்படி பேசுறேன். நீ போடி...''

''சரி, வா துணி துவைக்கப் போகலாம்...''

''அடிப்போடி பைத்தியக்காரி. டி.வியிலே நல்ல படம் ஓடுது நான் போறேன்...'' என்று சொல்லி டி.வி. முன் போய் அமர்ந்து கொண்டாள்.

◆

''ஏண்டி, கலா மேல் இப்படி வியர்வை நாத்தம் அடிக்குது?'' என்று கேட்டாள், வனஜா.

''அதாண்டி நான் இன்னைக்கு அவ பக்கத்திலேயே உட்காருல...'' என்றாள், சாந்தி.

''ஒரு வேளை குளிக்காமல் வந்திருப்பாளோ?''... கேட்டாள், வனஜா.

''ஏய். மிஸ் வர்றாங்க...'' எச்சரித்தாள், சாந்தி.

வகுப்பில் இருந்தவர்கள் எழுந்து வணக்கம் சொன்னார்கள்.

வருகைப் பதிவு எடுத்து முடித்த பின், மிஸ், சொன்னார்.'' வேணி, நேற்று நடத்திய திருக்குறள்களைச் சொல்...''

மிஸ் சொன்னதும் உடன் எழுந்து ஐந்து திருக் குறள்களையும் சொல்லி முடித்தாள் வேணி.

''அருமை... சரோஜா, நீ சொல்...''

அவளும் எந்த விதப் பிழையுமின்றி சொல்லி முடித்தாள்.

''அடுத்து கலா நீ சொல்...''

இரண்டு குறள்களை சொல்லி முடித்தவள் மற்ற குறள்கள் தெரியாமல் விழித்துக் கொண்டு நின் றிருந்தாள்.

அதைப் பார்த்த மிஸ், ''இங்கே வா... ஏன் படிக்க வில்லை?...'' வேணி யார்?...''

''என் தங்கை!...''

''இருவரும் ஒரே வீட்டில்தானே இருக்கிறீர்கள்?...''

''ஆமாம்!...''

''அவள் மட்டும் எப்படிச் சொன்னாள்?...''

''நேற்று டி.வி.யிலே எத்தனைப் படம் பார்த்தே?...'' இப்படி அவளை மிஸ் கேட்டதும் வகுப்பில் சிரிப் பொலி எழுந்தது.

''அமைதி... அமைதி!... உன் சீருடைகள் ஏன் இப்படி அழுக்காக இருக்கிறது?...

பதில் சொல்ல முடியாமல் நின்றிருந்தாள்.

''கேட்கிறேன்ல்ல பதில் சொல்லு...''

''துவைக்கலை...''

''உன் தங்கையின் உடைகளைப் பார்... எப்படி இருக்கு?...''

''நீட்டா இருக்கு...''

''அது மட்டும் எப்படி? அவளுக்கு யார் துவைத்துக் கொடுத்தா, அம்மாவா?...''

''இல்ல, அவளே துவைச்சா...''

''உன்னை விட சின்னவ அவ தூய்மையா இருக்கா... உன்னால ஏன் இருக்க முடியிலே?''

இந்த வகுப்பு முடியிற வரைக்கும் இங்கேயே இவர்கள் முன்னேயே முட்டிப் போடு...''

கலாவின் கண்களில் கண்ணீர் தழும்பியது. அவளுக்கு அவமானமாகப் பட்டது. முட்டிக்கால் போட்டாள்.

வகுப்புப் பிள்ளைகள் எல்லாம் அவளை ஒரு மாதிரியாய்ப் பார்த்ததும், அவளுக்கு அழுகையே வந்து விட்டது. தலையை கீழே குனிந்து கொண்டாள்.

அவள் தங்கை வேணிக்கு அழுகை அழுகையாக வந்தது...

அடுத்த நாள்...

''கலா, நேற்று நீ சொல்ல வேண்டிய திருக்குறளை சொல்லு...'' என்று மிஸ் சொன்னதும் -

கட கட வென்று எல்லா குறளையும் கலா சொல்லி முடித்தாள்.

''அருமை... இங்கே வாம்மா, கலா...'' அன்போடு மிஸ் அழைத்தார்.

சென்றாள்!...

''இன்றைக்கு பளிச்சின்னு இருக்கியே!... இப்படித் தான் இருக்கணும். நம் தேவைகளை ஓரளவு வளர்ந்த நாம்தான் செய்துக்கணும். அப்பா, அம்மாவை எல்லாவற்றிற்கும் எதிர் பார்க்கக் கூடாது. சரி, மகிழ்ச்சி, போய் உட்கார்...''

கலா தன்னோடு ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் அனைவரையும் பெருமிதத்தோடு பார்த்தாள்.

அவர்களும் நட்போடு புன்னகைத்தார்கள்.

●

10. சிந்திக்கத் தெரிந்த சிங்கம்

அரசபையில் கோபத்தோடும், குழப்பத்தோடும் அமர்ந்து இருந்தார். சிங்கராஜா.

பொதுப்பணித்துறை அமைச்சர் புலியாரும். சமூக நலத்துறை அமைச்சர் சிறுத்தையாரும், உணவுத் துறை அமைச்சர் யானையாரும், கல்வித் துறை அமைச்சர் குரங்காரும், அடுத்து சிங்கராஜா என்ன சொல்லப் போகிறாரோ, என்ன செய்யப் போகிறாரோ என்ற பயத்தோடு நின்றிருந்தனர்.

மற்ற அமைச்சர் பெரு மக்களும், அரசவைப் புலவ ரும், ஆஸ்தான ஜோதிடரும் அப்படியே இருந்தனர்.

''நாட்டில் நடக்கும் இந்தப் போராட்டங்களுக்கும், குழப்பங்களுக்கும் காரணம் யார்?'' கோபத்தோடு அமைச்சர்களைப் பார்த்து சிங்கராஜா கேட்டார்.

''அதைத்தான் அறிய முயற்சி செய்து கொண்டு இருக்கிறோம். இன்னும் அறிய முடியவில்லை, அரசே!''

''அதை அறிய முடியாத நீங்கள் எல்லாம் இங்கே எதற்கு? பதவியை ராஜினாமா செய்து விட்டு உங்கள்



வீட்டுக்குப்போய் மனைவிக்கு சமையல் உதவி செய்ய வேண்டியதுதானே?...''

''அரசே! இந்தக் குழப்பங்களுக்கும், போராட்டங் களுக்கும் அந்நிய நாட்டுச் சதியாக இருக்குமோ என்று நான் சந்தேகிக்கிறேன்'' என்றார் பொதுப் பணித்துறை அமைச்சர், புலியார்.

''புலியாரே, மூளையைக் கொஞ்சம் செலவு செய்தால் அது ஒன்றும் குறைந்து போகாது. கொஞ்சம் அதை 'யூஸ்' பண்ணுங்க. நம் நாட்டில் நடப்பது உலகளாவியப் பிரச்னையல்ல... சாதாரண... விசயம்.

மக்கள் வெளியில் எங்கும் செல்ல முடியாத நிலை, மருத்துவ மனைகளில் நோயாளிகள் அவதி, கல்வி

யாளர்களின் வேண்டாத வேலை நிறுத்தத்தால் குழந்தைகளின் படிப்பு பாழ்... இது எல்லாம் என் ஆட்சியில் நடைபெறலாமா?... இதைத் தீர்க்க வழி சொல்லாமல்... அந்நிய நாடாம்... சதியாம். சகதியாம்... ஏன் ஐயா உளறுகிறீர்?...''

''அப்படி என்றால்?... என்று சிறுத்தை யார் கூற வந்து நிறுத்த...

''எப்படி என்றால் அமைச்சரே?...

''நாம் கொடுக்கும் சம்பளம் போதாமல்...

''என்ன நீரும் உளறுகிறீர்? மற்ற நாட்டைடப் பார்க்கிலும் நாம் நிறைவாகவே கொடுக்கிறோம்... அதைப் புரிந்து கொள்ளும் முதலில்...''

''நாட்டில் நடக்கும் குழப்பத்திற்கு வேறு என்ன தான் காரணமாக இருக்கும்?''... என்றார் யானையார்.

''அதைத்தானே நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். உடல் வளர்ந்த அளவிற்கு உமக்குமூளை வளர வில்லையே...''

''உங்களை நம்பி இனி நான் இருக்கப் போவது இல்லை. நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் எல்லாம் இங்கிருந்து உடனே போங்கள்!'' என்று கோபமாகக் கூறி, அங்கிருந்து எழுந்து சென்றார், சிங்கராஜா.

அதைக் கண்டு ஏதும் புரியாமல் திகைத்து நின்றார்கள், மற்றவர்கள்.

◆

நாட்டின் நிலையை எண்ணி வேதனையோடு ஆலோசனை அறையில் தனியே உலவிக் கொண்டு இருந்தார் சிங்கராஜா.

அப்போது அறைக்கு வெளியே விரைந்து வந்த ஒற்றன், அரசரைப் பார்க்க வெளியில் நின்று கொண் டிருந்த காவலனிடம் அனுமதி பெற்றுக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

''அரசே, வணக்கம்...''

''வாருங்கள் ஒற்றரே...''

''அரசே, நீங்கள் சொல்லியது போல் அவர்தான் நம் நாட்டின் கலவரத்திற்குக் காரணம் தெளிவாக அறிந்து வந்து விட்டேன், அவரது கையாள்களே கூறினார்கள்.

''ம்... அப்படியா?... அந்த கருவேலர் கரடி யாருக்கும் இந்தப் போராட்டங்களுக்கும் எப்படி முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். ஒற்றரே நான் பார்த்துக் கொள்கிறேன். வேறு செய்திகள் இருந்தாலும் உடனே அறிந்து வாருங்கள். இப்போது நீங்கள் போகலாம்...'' என்று கூறிவிட்டு, ஒற்றர் போனதும், ஆசனத்தில் அமர்ந்து கரு வேலரைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார்... சிங்கராஜா.

அவசர அவசரமாக கூடிய அவையில் சிங்க ராஜாவும், மற்ற அமைச்சர்களும் நிறைந்து இருந் தார்கள்.

''அமைச்சர் பெருமக்களே. நம் நாட்டுக் கலவரத்திற்கு யார் காரணம் என்பதைக் கண்டு பிடித்து விட்டேன்...'' என்று சிங்கராஜா சொன்னதும் வியப் போடு அனைவரும் அரசரைப் பார்த்தார்கள்.

''ஆமாம். நான் நினைத்ததுபோல் என்னோடு தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றுப்போன பாலபுரத் தில் உள்ள கருவேலர்தான் இன்று நடக்கும் கலகச் செயல்களுக்கும், போராட்டங்களுக்கும் காரணம்.

அவருக்கு வேண்டிய ஆட்கள் நம் அரசின் அலுவலகங்களில் பணிபுரிகின்றார்கள். அவர் களோடு சில கூலிப்படைகளையும் சேர்த்துக் கொண்டு இப்படி கலகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார். அதற்காக பெரும் அளவில் பணத்தையும் செலவு செய்திருக்கிறார்.

''அரசே, இப்போது அவர் ஊரில் இல்லையே!'' என்றார், புலியார்.

''ஆம் அரசே! அவர் வெளிநாடு சென்று ஒரு வாரத்திற்கு மேலாயிற்று...'' என்றார், யானையார்.

''அரசியல் நுணுக்கம் தெரியாமல் ஏதும் பேசா தீர்கள். அவர் இங்கிருக்கும்போது கலகம், போராட் டம் நடந்தால் மற்றவர்களுக்கு தன் மீது சந்தேகம் வரும்

என்றுதானே எல்லா ஏற்படுகளையும் செய்து விட்டு, அவர் வெளிநாடு புறப்பட்டுப் போனது. இந்த அரசியல் தந்திரம் கூட அறியாமல் நீங்கள் எல் லாம்!''.... போகட்டும்... அடுத்தக் கட்ட நடவடிக்கை யாக நீங்கள் என்ன செய் யப் போகிறீர்கள்?... சொல்லுங்கள்!... என்று கேட்டார். அரசர்.

அமைச்சர்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள்.

''அரசே! கருங்காலி கருவேலரை வெளி நாட்டில் இருந்து நம் நாட்டிற்கு வராமல் செய்து விட்டால் என்ன?...'' என்றார் கல்வி அமைச்சர் குரங்கார்.

''அது எப்படி முடியும்?...'' கேட்டார், அரசர்.

''அங்கேயே அவரைத் தீர்த்துக் கட்டி விட்டால் போகிறது!... என்றார் குரங்கார்.

''மனிதப் பதர்களைப்போல் மடத்தனமாக சிந்திக் கிறீரே!... அதனால்தான், மக்கள் உன்னை இன்னும் இழிவாகப் பேசி வருகிறார்கள். நீர் என்றுதான் திருந்தப் போகிறீரோ?...'' என்று கோபமாக பேசியதும், கல்வி அமைச்சர் குரங்கார் தலை குனிந்து கொண்டார்.

''அரசே, இப்படிச் செய்தால் என்ன?...''

''எப்படிச் செய்ய வேண்டும் என்பதை நேரிடை யாகச் சொல்லாமல் இப்படிச் செய்தால் என்ன, அப்படிச் செய்தால் என்ன? என்று கேட்டுக் கொண்டு

இருக்கிறீரே?... என்று புலியாரைப் பார்த்து கோபப் பட்டார், அரசர்.

''அதாவது, அவர் ஏற்பாடு செய்துள்ள ஆட் களுக்கு எல்லாம் அவர் கொடுத்தப் பணத்தை விட நாம் அதிகம் கொடுத்து அவர்களை விலைக்கு வாங்கி விட்டால் என்ன?...'' என்று கேட்டார், புலியார்.

''உமது சிந்தனை ஓரளவிற்கு சரியாகத்தான் இருக்கிறது. ஆனால், நடை முறையில் பல நூறு பேர்களை நாம் கட்டிக் காத்து பாதுகாப்புக் கொடுக்க முடியாது. அதனால் வேறு வழிகளைச் சிந்தித்துப் பார்ப்போம்...'' என்றார், அரசர்.

''அரசர் சொல்லுவதும் சரியாகத்தான் இருக் கிறது...'' என்றார், புலவர்.

சிந்தனையில் மூழ்கியிருந்த அரசர் திடீரென்று விழித்து அவையோரைப் பார்த்து, ''அமைச்சர் பெருமக்களே, நான் சொல்வதை கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள்.''

''வெளிநாடு சென்றுள்ள கருவேலர் நாளை மாலை நாடு திரும்புகிறார். அதனால், அவரை நாம் வர வேற்பதைப்போல பல வண்ணங்களில் அவர் நிழற் படத்தோடு சுவரொட்டிகளை அச்சடித்து, நாடு முழுவதும் ஒட்டுங்கள்...''

''அரசே, அவருக்கு நாம் வரவேற்பு அளிப்பதா?'' கேட்டார் புலியார்.

''அமைச்சரே, முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். வஞ்சத்தை வஞ்சத்தால்தான் முறியடிக்க வேண்டும்.

ஆகவே, அமைச்சர் பெரு மக்களாகிய நீங்கள் எல்லாம் நாளை அவரை வரவேற்கச் செல்ல வேண்டும். அப்படியே இங்கே - அரசவைக்கும் என்னிடம் அழைத்து வர வேண்டும்... இதில் மாற்றம் ஏற்பட்டு விடக் கூடாது...'' கட்டளையாக தன் கருத்தை வெளி யிட்டார், அரசர்.

''அழைத்து வந்து...'' கேட்டார் புலியார்.

''இங்கு அவர் வந்ததும் நான் மாலை போடுவேன். ஆரத்தழுவுவேன். அப்போது நான் ஏற்பாடு செய் துள்ள பத்திரிகையாளர்கள் எல்லாம் இங்கே வந் திருப்பார்கள். அவர்கள் நிழற்படங்கள் எடுப்பார்கள். விருந்து கொடுப்பேன். பின், பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளிப்பேன். என்னவென்று...

திருமிகு கருவேலர் நமது கட்சியில் இணைந்து, நம் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடப் போகிறார். விரைவில் இந்த அரசில் முக்கிய மந்திரிப் பதவியும் வகிக்கப் போகிறார்...'' என்று.

அவ்வளவுதான்... பிறகு பாருங்கள்...'' என்று சொல்லி சிரித்தார், சிங்கராஜா.

அரசர் சொல்லியதைக் கேட்டு ஒரு நிமிடம் அவையில் இருந்த அமைச்சர்களும், மற்றவர்களும் திகைத்துப் போய் விட்டார்கள்.

''அரசே, நீங்கள் ஏன் அரசராகவும் நாங்கள் ஏன் மந்திரிகளாகவும் இருக்கிறோம் என்பதை இப்போது தான் புரிந்து கொண்டேன்'' என்றார், புலியார்.

''ஆம் அரசே! தங்களின் ராஜ தந்திரத்திற்கு எங்கள் பாராட்டும், பணிவான வணக்கங்களும்'' என்று யானையார் கூற, மற்றவர்களும், ''ஆம் அரசே!'' என்று வாழ்த்துக் கூறின.

''நன்றி! கால தாமதம் செய்யாமல் நான் சொன்ன படி எல்லா ஏற்பாடுகளையும் உடன் செய்யுங்கள்'' என்றார், சிங்கராஜா.

''அப்படியே சிறப்பாக செய்கிறோம் அரசே!'' என்று அமைச்சர் பெருமக்களும் மற்றவர்களும் சொல்லிச் சென்றார்கள்.

◆

மறு நாள்...

மிகச் சிறப்பாக கருவேலரின் வரவேற்பு நடந்து முடிந்தது.

முக்கிய மந்திரியாகவும் கரடி கருவேலர் அறிவிக்கப்பட்டார்.

பத்திரிகையில் எல்லாம் அரசர் சிங்கராஜாவோடு கரடி கருவேலர் படமும் பெரிய அளவில் வெளியாயின.

கருவேலர் அதை எல்லாம் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து போனார்...

◆

இன்று அந்த நாட்டில் கலவரம் ஏதும் இல்லை. வேண்டாத வேலை நிறுத்தப் போராட்டம் இல்லை.

வாகனங்கள் ஒழுங்காக ஓடுகின்றன. மருத்துவ மனைகளில், பள்ளி, கல்லூரிகளில் கூச்சல் குழப்பங் கள் இல்லை. எல்லாம் சரியாக இயங்குகின்றன.

தற்போது, சிங்கராஜாவின் ஆட்சி மீண்டும் சிறப்பாக நடக்கத் தொடங்கியது. மக்களும் நிம்மதி யாக வாழ்ந்தனர்.

●

11. ஒரு ஆடும் இரண்டு நரியும்

அந்தக் காட்டின் பெயர் பூங்குருவிக் காடு. பெயர் தான் பூங்குருவி காடே தவிர, அங்கே குருவிகள் மட்டும் வாழவில்லை. கொடிய விலங்குகளும் வாழ்ந்து வந்தன.

அன்று மதிய நேரம்...

நரி ஒன்று புதரில் பதுங்கி இருந்து ஏதாவது இரை வருகிறதா என்று பார்த்துக் கொண்டு இருந்தது. இதே போல் எதிர் திசையில் இருந்த புதர் ஒன்றில் வேறு ஒரு நரியும் பதுங்கி இருந்து இரை ஏதாவது வருகிறதா, என்று பார்த்துக் கொண்டு இருந்தது.

இரண்டும் இப்படி பதுங்கி இருக்க அவைகளுக்கு இடையில் இருந்த ஒற்றையடிப்பாதையில் ஒரு முயல் தாவித்தாவி போய்க் கொண்டிருந்தது.

அதைக் கண்ட இரண்டு நரிகளுமே, நம் பசிக்கு இந்த ஒரு முயல் போதாது. வேறு ஏதாவது இரை பெரிதாக வரட்டும் என்று எண்ணி, அப்படியே தங்கி இருந்தன.

காலையில் இருந்தே எந்த இரையும் கிடைக்காமல் இரண்டு நரிகளுமே மிகுந்த பசியோடு இருந்தன.

நேரமாக நேரமாக இரண்டுக்கும் மிகுதியாகப் பசி எடுக்கத் தொடங்கியது.



வெய்யில் வேறு சூடாக தகித்துக் கொண்டிருந்தது. நரிகளுக்கு வேர்க்கத் தொடங்கியதால், நாக்கை வெளியில் நீட்டி இரைப்பு வாங்கிக் கொண்டிருந்தன.

அந்த நேரத்தில் தன் கூட்டத்தில் இருந்து தவறி வந்த ஆடு ஒன்று 'மே... மே' என்று கத்திக் கொண்டே அவ் வழியே ஓடி வந்து கொண்டு இருந்தது.

ஆடு எழுப்பிய குரல் ஒலியைக் கேட்டு எதிரில் மறைந்து இருந்த இரண்டு நரிகளும் மகிழ்ச்சியோடு தலையை நீட்டி ஆவலோடு பாதையைப் பார்த்தன.

ஆட்டைப் பார்த்ததும்தான் தாமதம், இன்று நமக்கு சரியான வேட்டை என்று நினைத்தபடியே, புதரில் இருந்து வெளிப்பட்டு ஆட்டை நோக்கி ஓடி வந்தன இரண்டு நரிகளும்.

அப்போதுதான் தெரிந்தது அவைகளுக்கு முன்பே இன்னொருவனும் அங்கே காத்து இருப்பது.

'இவன் எப்படி இங்கே?' என்று இரு நரிகளும் எண்ணிக் கொண்டே ஆட்டைத் துரத்தின.

ஆடு மிரண்டு போய் 'மே...மே' என்று கத்திய படியே ஓடியது.

'அவனுக்கு முந்தி போய் அந்த ஆட்டை நாம் பிடித்துத் தின்ன வேண்டும்'' என்று எண்ணி ஒன்றுக்கு ஒன்று போட்டிப் போட்டு ஆட்டைத் துரத்தின.

ஆடு, 'இன்று நாம் தொலைந்தோம்' என்று எண்ணி பயந்த படியே அங்கே ஒற்றையடிப்பாதையில் ஓடிக் கொண்டு இருந்தது.

ஒரு வழியாக ஆட்டுக்கு முன்னே ஒரு நரியும். பின்னே ஒரு நரியும் சென்று ஆட்டை மடக்கி விட்டன.

ஆடு 'திருதிரு'வென்று விழித்த படியே நரிகளின் மத்தியில் பயத்தோடு அழுது கொண்டு நின்றிருந்தது.

நரிகள் ஒன்றை ஒன்று முறைத்துப் பார்த்துக் கொண்டன.

பின் கோபத்தோடு ஒரு நரி, கேட்டது: ''இந்த ஆடு எனக்குச் சொந்தம். நீ ஒதுங்கி விடு...''

''இல்லை. எனக்குத்தான் சொந்தம் நான்தான் முதலில் பார்த்தேன்.'' என்றது மற்ற, நரி.

''இல்லை. நான்தான் முதலில் துரத்தி வந்தேன். அதனால் எனக்குத்தான் சொந்தம்.'' என்று ஊளை இட்டது ஒரு நரி.

இரண்டு நரிகளுக்குமிடையே நடுக்கத்தோடும் இன்னும் சிறிது நேரத்தில் உயிர் போகப் போகிறதே என்ற பயத்தோடும் அழுது நின்றது ஆடு.

''இதோ பார் மரியாதையாகச் சொல்கிறேன் நீ இங்கிருந்து போய் விடு...''

''நானும் அதையேதான் சொல்கிறேன். நீ இங் கிருந்து ஓடி விடு. இல்லை. எனக்கிருக்கும் பசியில் உன்னை குதறி எடுத்து விடுவேன்...''

''என்ன?... என்னை நீ குதறி விடுவாயோ?''... என்று கோபத்தோடு கேட்டபடியே மற்ற நரியை நோக்கி முன்னேறியது...

''நான் சொல்ல மாட்டேன். சொன்னால் செய்யாமல் விட மாட்டேன். என்னோடு மோத வராதே... போய் விடு...''

''முன் வைத்த காலை பின் வைக்கும் பேடி மனிதனில்லை நான். வந்து பார், உன் உயிர் உடலில் தங்குகிறதா பார்ப்போம்...''

''சரி பார்த்துக் கொள்வோம் வா...''

இரண்டும் ஒன்றை ஒன்று தாக்கத்தொடங்கின.

மெல்லத் தொடங்கிய சண்டை சிறிது நேரத்தில் இருவர் முகத்திலும் இரத்தம் வழியும் நிலைக்கு ஆகி விட்டது.

ஒரு நரியின் மூக்குக் கிழிந்து இரத்தம் வழியத் தொடங்கியது.

மற்றதற்கோ, கண்ணின் புருவம் கிழிந்து சரியாகப் பார்க்க முடியாத நிலையில் தடுமாறியது.

இரண்டு நரிகளும் ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ள முடியாத அளவிற்கு களைத்து கீழே விழுந்தன.

இதுதான் சமயமென்று மெல்ல பதுங்கி ஆடு வேகமாக ஓடியது.

எழுந்து சென்று பிடிக்க முடியாத நிலையில் நரிகள் இரண்டும், ஆடு ஓடுவதையே ஏக்கத்தோடு படுத்துக் கொண்டே பார்த்துக் கொண்டிருந்தன.

அப்போது, ஒரு நரி உடல் வலியோடு -

''நீயும் நானும் சண்டைப் போட்டுக் கொள்ளாமல் ஒற்றுமையாக இருந்திருந்தால் இப்போது நமக்குக் கிடைத்த உணவு நம் கண் முன்னேயே இப்படி ஓடாது...''

''ஆமாம் நண்பரே, இந்த மனிதர்களைப் போல் நாமும் கோபப்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டு இப்படி ஏமாந்து விட்டோமே...''

''இனியாவது நாம், மனிதர்களைப் போல் கோபப்பட்டு அழிவையும், அவமானத்தையும் தேடிக் கொள்ள வேண்டாம் என்று நினைக்கிறேன்.''

''உண்மைதான் நண்பரே! வா, இனி நாம் ஒற்றுமையாக இருந்து உய்வோம்...'' என்று கூறி இரண்டும் சேர்ந்து, பசியோடு தள்ளாடி நடக்கத் தொடங்கின.

●

12. வணஜா!...

''ஏய், அந்தாண்டப்போடி... நான் தான் முதல்லே தலை பின்னிப்பேன்...''

''அது எப்படியடி... நான்தான் முதல்ல அம்மா முன்னே வந்து உட்கார்ந்தேன்...

''நீ முதல்ல வந்தாலும் சரி, முடிவுல வந்தாலும் சரி நான்தான் பின்னிப்பேன்... அம்மா நீங்க பின்னி விடுங்க...''

''ஏண்டி இப்படி ஒவ்வொரு நாளும் உயிரை எடுக்கிறே?... கொஞ்சம் முன்னாடியே எழுந்தா என்னடி?...

''எல்லாம் எனக்குத் தெரியும்? நேரமாவுது பின்னி விடு... ஏய் எழுந்திருடி...''

''போடிக் குரங்கு, தினமும் இவகிட்ட இதே ரோதனை... அம்மா, இனிமே யார் முதல்ல வர்றாங் களோ அவுங்களுக்குத்தான் பின்னி விடனும்... இல்ல, நான் அப்பாகிட்டே சொல்லிடுவேன்...''

''சரி சொல்லிக்கடி... போடி... அம்மா நீ ஏன் சும்மா இருக்க. பின்னி விடு, ஸ்கூலுக்கு நேரமாகுது...'' அவசரப் படுத்தினாள்.

வளர்மதியும், வனஜாவும் அக்கா, தங்கைகள். இரண்டு பேருமே எட்டாவது படிக்கிறார்கள்.

வளர்மதி எப்படியும் முதல், இரண்டு 'ரேங்'குகளுக்குள் வாங்கி விடுவாள். தங்கை வனஜா எப்போதும் ஐந்தாவது 'ரேங்'கிற்குக் கீழேதான் இருப்பாள்.

இவர்கள் தந்தை ஆட்சியர் அலுவலகத்தில் நல்ல ஒரு நிலையில் பணியாற்றி வருகிறார். தாய், வீட்டு வேலைகளோடு இருக்கிறார்.

◆

வருகைப் பதிவு நடந்து முடிந்தது.

முதல் வகுப்பு தொடங்கியது.

எல்லோரையும் ஆசிரியை ஆங்கிலப் பாடல்கள் எழுதிய நோட்டை எடுத்து வந்து தன் முன்னே உள்ள மேஜை மீது வைக்கச் சொன்னார்.

அதன்படியே எல்லோரும் அவரவர் பையைத் திறந்து எடுத்துக் கொண்டு போய் மேஜை மீது வைத்தார்கள்.

வனஜா மட்டும் தன் நோட்டைத் தேடிக் கொண்டிருந்தாள்.

நோட்டு இல்லை என்றால் சரோஜா மேடம் அடித்து நொறுக்கி விடுவாரே' என்று வனஜா எண்ணியதுமே அவள் உடல் வேர்க்கத் தொடங்கியது.



எங்கே போயிருக்கும்?... காணவில்லையே.

அடுத்த பெஞ்சில் அமர்ந்திருந்த வளர்மதி கேட்டாள்: ''ஏய், என்ன தேடுற?...''

''ஆங்கில நோட்டைக் காணலடி!...

''எங்க வச்சே?...''

''அதானடி தெரியில...''

''அங்கே என்ன பேச்சு? எல்லோரும் நோட்டை வச்சாச்சா?...''

''டீச்சர் ...'' - வனஜா.

''என்ன வழக்கம் போல அவசரத்துல எதையாவது வீட்டுலே வச்சிட்டு வந்துட்டியா?...''

''ஆமாம், டீச்சர்... ஆங்கில நோட்டை...

''இங்கே வா...''

சென்றாள். கையை நீட்டினாள். வழக்கம்போல் அடி விழுந்தது.

''ஏய், நேத்து தமிழ் நோட்டை வச்சிட்டு வந்த, அதுக்கு முதல் நாள் பேனாவை விட்டுட்டு வந்த... இப்படி ஒவ்வொரு நாளும் ஏன் நடத்துக்கிறே?...''

''காலையிலே படிச்சுகிட்டு இருந்தேன்... வாற அவசரத்துல அதை வச்சிட்டு வந்துட்டேன்...''

''வளர்மதி உன் அக்காதானே... அவ எப்படி ஒழுங்கா... எடுத்துகிட்டு வாற?...''

''சரி. இன்னைக்கு குளிச்சியா?...''

எல்லோரையும் பார்த்தாள். சொல்லத் தயங்கினாள்.

''என்ன கேட்டது காதிலே விழலியா?...''

''இல்லிங்க டீச்சர்!...''

''காதிலே விழலிங்கிறீயா?...

''இல்ல - குளிக்கிலே!...''

''ஏன்?...''

''நேரமாயிடுச்சி...''

''உன் அக்கா குளிச்சாளா?...

''ம்...''

''அவ மட்டும் எப்படி குளிச்சிட்டு வந்தா?...''

''தெரியிலே...''

''தெரியிலேயா?... அலட்சியமா? சோம்பேறித் தனமா?... காரணம் என்னன்னு கண்டு பிடி...'' நாளையிலே இருந்து ஒழுங்கா நீ இல்லேன்னா உன் பேரன்ஸை கூட்டிக்கிட்டுத்தான் வரணும். புரிஞ்சுதா?...''

''புரிஞ்சுது!...''

''போய் உட்கார்!...''

அவமானத்தால் அவளுக்கு அழுகையே வந்து விட்டது.

வந்து தன் இடத்தில் அமர்ந்தாள்.

எல்லோர் பார்வையும் ஒரு நிமிடம் அவள் மீது பதிந்து, நகர்ந்தது.

பாடங்கள் நடந்து முடிந்து, மதிய வேளைக்கான பள்ளி மணி ஒலித்தது!

எல்லோரும் மதியச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு இருவர் மூவராக சேர்ந்து அமர்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள்.

வனஜா வாடிய முகத்தோடு, தன் மதியச் சாப் பாட்டை எடுக்கப் பையைத் திறந்தாள்.

அங்கே சாப்பாட்டு 'டப்பா' இல்லை! பசி அவள் வயிற்றைப் பிசைந்தது.

'அம்மா, தேங்காய் சாதம் வைத்து டப்பாவில் கொடுத்தார்களே! எங்கே போயிற்று?

அப்போதுதான் மேஜை மீது வாங்கி வைத்தது நினைவிற்கு வந்தது.

வனஜா தனியே நிற்பதைக் கண்டு அவள் தோழி லலிதா அழைத்து என்ன என்று கேட்டாள்.

''அவ்வளவுதானடி?... நான் இட்லி கொண்டு வந்திருக்கேன். ஆளுக்கு ரெண்டு சாப்பிடுவோம், வா...'' என்று அழைத்தாள்.

இருவரும் சாப்பிட்டு முடித்தார்கள்.

வனஜா மனசு மட்டும், இப்படி ஒவ்வொரு நாளும் எதையாவது மறந்து வர காரணம் என்ன? ஏன் இந்த நிலை? எதனால் இப்படி நடக்கிறது?...

அக்காள் மட்டும் எல்லாவற்றிலும் சரியாக இருக்கிறாளே அது எப்படி? அதைக் கண்டு பிடிக்க வேண்டும்?...

''பள்ளிக் கூடம் விட்டு வந்ததுலே இருந்து அவ ஏன் ஒரு மாதிரியா இருக்கா?...''

பள்ளியில் நடந்தவைகளை எல்லாம் சொன்னாள், வளர்மதி.

நாம சொன்னா கேட்பாளா? இப்ப அவமானப் பட்டு நிக்கும்போது தானே தெரியும். இனியாவது தெரிஞ்சு நடந்து கிட்டா சரிதான்.

எல்லாவற்றையும் கேட்டபடியே டி.வி.யின் முன் உட்கார்ந்து இருந்த வனஜா ''என்னைப் பத்தி யாரும் எதுவும் பேச வேண்டாம்...''

''இந்த கோபத்துக்கு மட்டும் எப்பவும் குறைச்சல் இல்ல...'' என்றாள், அம்மா.

''அம்மா, அவளே யார் மேலேயோ கோபமா இருக்கா, நீங்க வேற, ஏன் அவளைச் சீண்டுறீங்க?...'' என்றாள், வளர்மதி.

''அவ மேலதானே அவ கோபப்படனும். மத்தவங்க மேலே ஏன் கோபப்படணும்?...

''நீங்க என்னம்மா சொல்றீங்க?'' கேட்டாள், வளர்மதி.

''இதோ பாரும்மா, ஸ்கூல் எத்தனை மணிக்கு?...''

''எட்டரைக்கு!...''

''காலையிலே நான் உன்னை எழுப்பும் போதே அவளும் எழுந்தாதானே சரியா இருக்கும். அவ எங்கே எழுறா? எழுப்பினா என்ன சொல்றா?... கொஞ்ச நேரம் ஆகட்டும் கொஞ்ச நேரம் ஆகட்டு முன்னு எட்டு மணிக்குத்தானே எழுறா?

ஆனா, நீ அப்படி இல்ல. உடனே எழுந்து அப்பா குளிக்கிறதுக்கு முன்னேயே குளிச்சி, சாமி கும்பிட்டு, படிச்சிட்டு இன்னைக்குப் பள்ளியிலே என்னென்ன பாடம், என்னென்ன தேவைன்னு சரி பாத்து வச்சிட்டு, பிறகு சாப்புட்டுட்டு நிதானமா 'டென்சன்' இல்லாமப் போறே? ஆனா, அவ அப்படியா?...

எட்டரை மணி ஸ்கூலுக்கு எட்டு மணிக்கு எழுறா... பாத் ரூம் போறா, அவசரத்துல குளிக்கிறது இல்லை. பாதி சாப்பிட்டதும் சாப்பிடாததுமா அவசர அவசரமா சாப்பிட்டுட்டு கைக்குக் கிடைச்ச புத்தகத்தை, பேனாவை எடுத்து பைக்குள்ள போட்டுக்கிட்டுப் போறா... போற அவசரத்துல எதை வச்சோம். எதை எடுத்தோம்னு தெரியாம போறா... அங்கே போய் அவமானப் படுறா...

''சரி. நீ வாம்மா சாப்பிட்டுப்படு. அவ டி.வி. பார்த்துட்டு எப்போதும் போல லேட்டா படுக்கட்டும். லேட்டா எழட்டும். அவமானப் படட்டும். நமக்கு என்ன?'' என்று அலுத்துக் கொண்டார் தாய்.

இதுவரை தன் தாய் சொன்னதை எல்லாம் டி.வி. பார்த்தவாறு கேட்டுக் கொண்டிருந்தவள் ஒரு முடிவோடு எழுந்தாள். டி.வியை நிறுத்தினாள்...

சாப்பாட்டு மேஜை முன்னே வந்து அமர்ந்தாள். 'அம்மா பசிக்குது!...'

''என்னம்மா டி.வி. சீரியல் எல்லாம் முடிஞ்சா தானே சாப்பிட வருவே...

''எல்லாம் ஒருவழியா இன்னையோட முடிஞ் சிடுச்சி. இப்ப எனக்குப் பசிக்குது...''

''இதோ இட்லி கொண்டு வர்றேன்...''

எடுத்து வந்து வைத்தார்.

வனஜா சாப்பிட்டாள். அவள் படுக்கையில் சென்று படுத்தாள்.

எல்லாவற்றையும் பார்த்து கொண்டு இருந்த தாய்க்கு ஒன்றும் புரியவில்லை.

இவளுக்கு என்ன வந்தது? சிரித்துக்கொண்டாள்.

◆

காலை ஆறு மணி.

தாய் குழந்தைகளை எழுப்பினாள்.

முதலில் எழுந்தவள் வனஜாதான்.

பாத்ரூம் சென்று காலைக் கடன்களை முடித்து விட்டு.. ஈரத்தலையோடு வெளி வந்தவள் பேன் காற்றில் தன் முடியை உலர்த்திக் கொண்டிருந்தாள்.

காபி போட்ட படியே வனஜாவைப் பார்த்து உள் மனதிலேயே சிரித்துக் கொண்டிருந்தாள், தாய்.

தாமதமாக எழுந்து வெளியில் வந்த வளர்மதி, வனஜாவைப் பார்த்து அசந்து போனாள்.

''ஏய் வனஜ், உனக்கு என்ன ஆச்சு?...'' எதுவும் பேசாமல், மெலிதாய்ப் புன்னகைத்தாள்!

தலை முடி காய்ந்து விட்டதா என்று தொட்டுப் பார்த்த படியே அன்று படிக்க வேண்டிய புத்தகங்களை பையில் இருந்து எடுத்து வைத்தாள்.

''அதே நேரம் ''இந்தாம்மா காபி...''

''வைம்மா... சாமி கும்பிட்டு வந்து குடிக்கிறேன்...''

''சாமி படத்து முன்னே கூட நிக்க மாட்டாளே... இன்னைக்கு...'' நினைத்தாள்.

தலை காய்ந்ததும், ''அம்மா எனக்கு தலை பின்னி விடேன்...''

''இட்லிக்கு மாவு ஊத்தி வச்சிட்டு வந்துடுறேன்... இப்படி உட்கார்...''

என்றும் இல்லாமல் அன்று அவள் தாய்க்கு மகிழ்ச்சியாக இருந்தது.

''இப்படி திருப்பும்மா...'' வனஜாவிற்கு சடை பின்னத் தொடங்கினாள்.

சடை பின்னி முடித்த பின்தான் வளர்மதி அங்கு வந்து சேர்ந்தாள்...

ஒரு வழியாக இருவரும் காலையில் செய்ய வேண்டிய பாடங்களை எழுதி முடித்து, டிபன் சாப்பிட்டு முடித்தார்கள்.

வனஜா, கடிகாரத்தைப் பார்த்தாள். மணி 7.50.

இரவும், காலையிலும் படித்த புத்தகங்களையும் எழுதிய நோட்டுகளையும் ஒழுங்காக பையில் அடுக்கி வைத்து, பேனா, பென்சில், ரப்பரையும் மறக்காமல் எடுத்து வைத்தாள்.

மணியைப் பார்த்தாள் 8.00

இப்போது பள்ளிக்குக் கிளம்பினால் இருபது நிமிடத்தில் சேர்ந்து விடலாம்.

''அம்மா, நான் ஸ்கூலுக்குப் போயிட்டு வர்றேன்...''

அடுக்களையில் இருந்த தாய் ஓடி வந்து வாயிலில் நின்று அவள் பள்ளிக்குப் போவதையே மகிழ்ச்சி யோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

வளர்மதி இன்னும் உள்ளே என்ன பண்ணிகிட்டு இருக்கா?...

''அம்மா வளர்மதி...'' ஸ்கூலுக்கு நேரமாயிடுச்சே, என்ன செய்துகிட்டு இருக்கே?...''

''இதோ கிளம்பிகிட்டு இருக்கேன்...''

◆

வனஜாவின் மாற்றத்தைக் கண்டு, அவளின் வகுப் பாசிரியை சரோஜா, அடிக்கடி பாராட்டி மகிழ்ந்தார்.

இப்போதெல்லாம் எதையும் அவள் மறந்து வைத்து விட்டு பள்ளிக்குச் செல்வது இல்லை. தாமதமாகவும் செல்வது இல்லை.

அவளின் எந்த ஒரு செயலிலும் தெளிவு இருந்தது. இப்போது வகுப்பில் முதல் இரண்டு 'ரேங்'கில் நின்றாள்!

இவை எல்லாம் எப்படி நடந்தன..

அவள், சோம்பேறித்தனத்தை விட்டொழித்ததாலும், காலத்தையும் நேரத்தையும் பயனுள்ள வகையில் செலவிட்டதாலும்தான் என்பதை உங்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ?...

●

13. குரங்கின் யோசனை

அது பழமரங்கள் நிறைந்த காடு.

அங்கே, ஒரு மாமரத்தின் கீழே நரி ஒன்று ஆழ்ந்த சிந்தனையோடு உட்கார்ந்து இருந்தது.

மதிய நேரம் ஆகிக் கொண்டு இருந்ததால் அதற்கு பசியும் பெருகிக் கொண்டு இருந்தது.

இந்தப் பக்கமாகத்தான் அந்த மான்கள் இரண்டும் தினமும் வருகின்றன.

அதன் கொழு கொழு உடலை எண்ணியதுமே, அதன் நாவில் நீர் ஊறத் தொடங்கியது.

மான்கறி தின்று எவ்வளவு நாளாகிறது?...

சென்ற மாதம் ஒரு நாள், ஒரு மானை ஓநாய் அடித்துத் தின்று மீதம் போட்டதைத் தின்றது அதன் நினைவிற்கு வந்தது.

நம்மால் தனித்து அப்படி ஒரு மானைப் பிடித்து அடித்துத் தின்னமுடிய வில்லையே...!

நாம் பிடிக்கப் போனால் என்ன வேகமாக ஓடி தப்பித்து விடுகிறது.

எப்படி அதை மடக்கிப் பிடிப்பது?...

இப்படி ஆழ்ந்து சிந்தனை செய்தபடியே உட்கார்ந்து இருந்தது நரி.

அந்த நேரத்தில் கொய்யாமரத்தில் பழங்களைப் பறித்துத் தின்று விட்டு, கீழே இறங்கி மாமரத்துப் பக்கம் வந்த குரங்கின் பார்வையில் நரி பட்டது.

''என்ன நரியாரே, ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பது போல் தெரிகிறதே?...'' என்று கேட்டுக் கொண்டே அதன் அருகில் வந்து அமர்ந்தது குரங்கு.

குரல் கேட்டு திரும்பிப் பார்த்த நரி, ''வா தம்பி. சிந்தனைதான் செய்து கொண்டு இருந்தேன்...'' என்று சொல்லி விட்டு, ஏன் இதனிடம் அதற்கு ஒரு வழி கேட்டால் என்ன என்று நினைத்தது.

''அப்படி என்ன சிந்தனை அண்ணா, நான் தெரிந்து கொள்ளலாமா?...'' கேட்டது, குரங்கு.

''உனக்கு மனிதமூளை இருப்பதாகச் சொல் கிறார்கள். நீயே எனக்கொரு வழி சொல்லேன். என்றது. நரி.

''விசயத்தை சொல் அண்ணா, என்னால் முடிந்த அளவு சொல்கிறேன்...'' என்றது, குரங்கு.

''வேறு ஒன்றும் இல்லை தம்பி. தினமும் இந்தப் பக்கம் இரண்டு மான்கள் வருகிறது. இரண்டும் கொழு கொழு வென்று இருக்கும். அதை நான் எப்படியாவது



அடித்துத் தின்ன வேண்டும். இரண்டுமே வேண்டாம் ஒன்று கிடைத்தாலே போதும். அவ்வளவுதான்...'' என்று தன் எண்ணத்தைச் சொன்னது. நரி.

''அவ்வளவுதானே, அடித்துத் தின்ன வேண்டியது தானே...?'' என்றது, குரங்கு.

''என்ன தம்பி, விளையாடுகிறாயா? நான் அதை எப்படிப் பிடிப்பதாம்? என்னை விட அது எவ்வளவு வேகமாக ஓடும் என்பது உனக்குத் தெரியாதா? அப்படி இருக்கும்போது எப்படி என்னால் முடியும்?...''

''ஆமாம் ஆமாம். நம்ம இனத்திலேயே அதிவேக மாக ஓடக்கூடியவர் சிறுத்தையார். அவரின் பிடியி லேயே சில நேரம் சிக்காமல் ஓடி விடுமே...'' என்றது, குரங்கு.

''அதனால்தான் தம்பி, அதை வேறு குறுக்கு வழியில் மடக்க வேண்டும். அதைத் பற்றித் தான் கொஞ்ச நேரமாகச் சிந்தித்துக் கொண்டு இருந்தேன்.

''சிந்திக்க வேண்டிய விசயம்தான். அது சரி. அவைகள் எந்தப் பக்கம் வரும் என்று சொன் னீர்கள்?...'' கேட்டது. குரங்கு.

''அட, இந்தப் பக்கம்தான் தம்பி.

''எப்போது வரும்?'' கேட்டது குரங்கு.

''மாலையில்''... ''அப்படியா...'' என்று சொல்லிய குரங்கு சிறிது நேரம் சிந்தித்து விட்டு,'' அண்ணா, நான் சொல்வது போல் செய்கிறீர்களா?...'' என்று கேட்டது

''அந்த மான்கறி எனக்கு வேண்டும். அதற்காக நான் கடலில் குதிக்கச் சொன்னாலும் குதிக்கிறேன். மலையில் ஏறி இறங்கச் சொன்னாலும் இறங்கு கிறேன்.''

''அதெல்லாம் ஒன்றும் செய்ய வேண்டாம். நான் சொல்வது படி செய்தால் போதுமானது.'' என்றது, குரங்கு.

''சொல் தம்பி. சொல். உன் எண்ணப்படியே செய்து முடிக்கிறேன்; அந்த மானைப் பிடிக்கிறேன். அதன் கறியைத் தின்று முடிக்கிறேன்'' என்றது ஆவலோடு. நரி.

''அந்த மான் இந்த வழியாகத்தான் வரும். அதுவும் மாலையில் வரும். அப்படித்தானே அண்ணா?'' கேட்டது குரங்கு.

''ஆம் தம்பி, இதோ இந்த வழியில் தான் வரும், அதுவும் மாலையில் தான் வரும். நான்தான் அவை களை ஒவ்வொரு நாளும் பார்க்கிறேனே!'' என்றது நரி.

''சரியண்ணா! அப்படி என்றால், இந்தப் பக்கம் ஒரு குழி தோண்டுங்கள்...

''குழி தோண்டி... அதில் சின்னச் சின்னக்குச்சிகளை பரப்பி, அதன் மீது காய்ந்த சருகுகளைப் போட்டு, அதன் மீது மண்ணை லேசாகப் போட்டு பள்ளம் தெரி யாத அளவில் மூடி விட வேண்டும்.

''என்ன தம்பி, நான் மானைப் பிடிக்க வழி கேட் டால் நீ குழியைத் தோண்டிட இலையைப் போடச் சொல்கிறாய்?''

''நான் மானைப் பிடிக்கத்தான் வழியைச் சொல் றேன்.'' என்றது சிரித்த படியே, குரங்கு.

''அதெப்படி, தம்பி?... கேட்டது, நரி.

மான்கள் இரண்டும் வரும். அப்போது அதன் பின்னே இருந்து நீ துரத்த வேண்டும். அவைகள் பயந்து தப்பிக்க வேகமாக ஓடி வரும். அப்படி வரும் போது, சருகு தானே என்று அதன் மீது காலை வைக்கும், அப்படியே குழிக்குள் இருமானும் விழுந்தாலும் விழும் இல்லை ஒன்றாவது விழும். அப்போது அதை அமுக்கிப் பிடித்து உன் இஷ்டம் போல் சாப்பிட்டு முடிக்க வேண்டியதுதானே!...'' என்றது, குரங்கு.

''அற்புதமான செயல் தம்பி...! இதனால்தான் உனக்கு மனித மூளை என்கிறார்கள். உண்மைதான். அது...'' என்று பாராட்டியது, நரி.

''பாராட்டு இருக்கட்டும் அண்ணா, வேகமாக குழியைத் தோண்டுங்கள். அதற்குள் நான் மரத்தில் ஏறி கொம்புகளை உடைத்து எடுத்து வருகிறேன்...!'' என்றது, குரங்கு.

''சரி தம்பி ஆழமாக நான் குழியைத் தோண்டு கிறேன். நீ போய் வா...'' என்று மகிழ்ச்சியோடு கூறி விட்டு, புதரில் கிடந்த ஒரு நீண்ட கொம்பை எடுத்து வேக வேகமாகக் குழியைத் தோண்டத் தொடங்கியது.

குரங்கு மரத்தில் ஏறி சின்னச் சின்னக் கொம்புகளை உடைத்துப் போட்டது.

நரியோ, வியர்க்க வியர்க்க குழி தோண்டிக் கொண் டிருந்தது. குழி ஆழமாக இருந்தது. மான் விழுந்தால், எழுந்து விடுமோ?... என்று எண்ணிய நரி மீண்டும் ஆழமாகத் தோண்டியது.

அதற்குள், குரங்கு மரத்தில் இருந்து கொம்புகளை உடைத்து எடுத்து வந்தது.

''தம்பி, குழியின் ஆழம் போதுமா?...'' கேட்டது, நரி.

கொம்புகளை எல்லாம் கீழே போட்டு விட்டு நரி தோண்டிய குழியை எட்டிப் பார்த்தது குரங்கு. பின், ''போதும் அண்ணா, மான் விழுந்தால் எழ முடியாது. போதும். மேலே வாருங்கள்'' - என்றது.

வியர்வையைத் துடைத்துக் கொண்டு, ''தம்பி, கொஞ்சம் கை கொடு, நான் மேல் ஏறி வருகிறேன்.'' என்றதும், நரி ஏறி வர கை கொடுத்தது.

மேலேறி வந்த நரி, ''தம்பி, அடுத்து என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டது.

''அண்ணா, நீங்கள் மிகவும் களைப்பாக இருக்கிறீர்கள். கொஞ்சம் இப்படி அமர்ந்து ஓய்வு எடுங்கள். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள்'' என்று சொல்லி விட்டு கொம்புகளை எல்லாம் குழியின் மேலே வரிசையாக அடுக்கி வைத்து விட்டு, பக்கத்தில் புதரில் இருந்து சருகுகளை எல்லாம் எடுத்து வந்து அதன் மேலே பரப்பியது. பின், அதன் மீது மண்ணை அள்ளி, சருகுகள் தெரியாத அளவில் தூவி மறைத்தது.

அதுவரை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு அமைதியாக உட்கார்ந்திருந்த நரி. உற்சாகத்தோடு எழுந்து வந்து,'' தம்பி மிக அருமையாக செய்து விட்டாய். இங்கே பள்ளம் இருக்கிறது என்று யாரிடமாவது கூறினால் கூட நம்ப மாட்டார்கள். அந்த அளவிற்கு இயற்கையாக இருக்கிறது. நானே சிறிது தூரம் சென்று விட்டுப் பார்த்தால் என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. அந்த அளவிற்கு உன் கைவண்ணம் இருக்கிறது.'' என்று சொல்லி கை கொடுத்துப் பாராட்டியது.

''அண்ணா, அந்த மான்கள் எப்போது வரும்?'' என்று கேட்டது, குரங்கு.

வானத்தை அண்ணாந்து பார்த்து விட்டு, ''தம்பி சூரியன் இன்னும் கொஞ்சம் மேற்கே சென்றதும் அவைகள் வந்து விடும்...'' என்றது நரி.

''சரி அண்ணா, என் குழந்தைகள் தனியே இருப் பார்கள். நான் வருகிறேன். நீங்கள் உங்கள் நீண்ட நாள் கனவை இன்று நிறைவேற்றுக் கொள்ளுங்கள். வயிறார மான் விருந்தைச் சாப்பிடுங்கள். நான் வரட்டுமா?...'' என்று கேட்டது, குரங்கு.

''சரி தம்பி சென்று வா...'' என்றது, நரி.

''அண்ணா, இங்கேயே உட்கார்ந்து விடாதீர்கள். அதோ அந்தப் புதரில் போய் ஒளிந்து கொள்ளுங்கள். அவைகளை முன்னே விட்டு, பின்னே துரத்துங்கள். நீங்கள் முன்னே ஓடினால் நீங்கள்தான் குழியில் விழ வேண்டி வரும்...'' என்று சொல்லி சிரித்தபடியே நடந்தது, குரங்கு.

''தம்பி, என்னை அவ்வளவு இளிச்ச வாயனாகவா எண்ணி விட்டாய். நான் எப்படி அவைகளை மடக்கு கிறேன் பார்'' என்று சொல்லிய படியே தூரத்தில் இருந்த புதரை நோக்கிப் போனது, நரி.

◆

புதரை நோக்கி நடந்து சென்ற நரி, அதனுள்ளே நன்றாக மறைந்து கொண்டது.

''மான்கள் தூரத்தில் வருகிறதா? என்று புதர் மறைவில் இருந்து எட்டிப் பார்த்தபடியே இருந்தது.

காலையில் இருந்து எதுவும் தின்னாததால் அதற்கு பசிவேறு எடுத்தது. வயிற்றைத் தடவிய படியே, எப்படியும் இன்னும் சிறிது நேரத்தில் மான்கள் வந்து விடும்... பிறகு அவைகளை நாம் துரத்துவோம். அவைகள் ஓடும்... அப்படியே குழியில் விழும். ஒன்று விழுந்தால்... இன்றைய உணவைச் சிறப்பாக்கிக் கொள்வோம்... இரண்டும் விழுந்தால்... நாளை ஒன்று வைத்துக் கொள்வோம்...'' என்று நினைத்தபோதே அதன் நாவில் நீர் ஊறியது.

புதரில் இருந்து கழுத்தை நீட்டி வெளியே பார்த்த நரி'' என்ன இன்னும் அவைகளைக் காணவில்லையே. ஒரு வேளை, இன்று வேறு வழியாக போயிருக் குமோ?... அப்படி எல்லாம் இருக்காது.

நாம்தான் தினமும் பார்க்கிறோமே. நேற்றுக் கூட இந்த வழியாகத்தானே இரண்டும் மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டு போயின. கண்டிப்பாக இந்த வழியாகத்தான் வரும்'' என்று எண்ணியபடியே பதுங்கி இருந்தது, நரி.

அதே நேரம் இரண்டு நரிக்குறவர்கள். ''ஏய், அந்த கொழுத்த நரி இங்கேதான் இருக்கிறது: இதோ பார்

நரியோட பாதம் மண்ணிலே பதிஞ்சு இருக்கு...'' என்றான், ஒருவன்.

''ஆமாண்டோய். நீ சொல்றது சரிதான் இங்கேதான் அது பதுங்கி இருக்கணும். ஒரு புதர் விடாமல் நல்லா சோதனைப் போடு. கண்ணுலப் பட்டா ஒரே அடியிலே காலை ஒடச்சிடு,'' என்றான் மற்றவன்.

அவர்கள், பக்கத்துப் புதரில் நின்று பேசிக் கொண்டதை எல்லாம் கேட்ட நரி, தன் காலைத் தொட்டுப் பார்த்துக் கொண்டே நடுங்கியபடி பயத்தில் பதுங்கிக் கொண்டு இருந்தது.

பக்கத்துப் புதரில் நின்று பேசிக் கொண்டு இருந்தவர்கள், நரி இருந்த புதர் பக்கம் வந்து நின்று, ''ஓய். இந்தப் புதர் பெரிசா இருக்கு, அந்த கொழுத்த நரி இதுக்குள்ள இருந்தாலும் இருக்கும்...'' என்றான் ஒருவன்.

''ஆமாம் ஆமாம்... அடர்ந்த புதரா இருக்கு நீ அந்தப் பக்கம் போ, நான் இந்தப் பக்கமிருந்து பார்க்கிறேன்...'' என்றான், மற்றவன்.

''ஏய், கண்டா அந்த நரியின் காலை ஒடிச்சிடு...''

''காலை ஒடிக்கறதா?... நான் பார்த்தா அவ்வளவு தான். ஒரே அடியிலே அது உயிரை எடுத்துட மாட்டேன்...'' என்றான்.

அவர்கள் பேசியதைக் கேட்ட நரிக்கு உடலும், உயிரும் நடுங்கியது. இன்று இவர்கள் கண்ணில் நாம்

பட்டால் தொலைந்தோம். எப்படியாவது இவர் களிடம் இருந்து நாம் தப்ப வேண்டுமே என்ற எண்ணத் தில் தவித்துக் கொண்டு புதர் மறைவில் தன்னுடலைச் சுருக்கி மறைந்து கொண்டு இருந்தது, நரி.

நீண்ட கோல்களைக் கொண்டு புதர் மீது அடித்து வருவதைப் பார்த்த நரி, இனி மேலும் நாம் இங்கு மறைந்து இருந்தால் நம் உயிர் அவர்கள் கையால் தான் போகும் என்ற முடிவுக்கு வந்த நரி, ஒரு பக்கமாக மெல்ல மெல்ல மறைந்து புதரை விட்டு வெளியே வரவும், அங்கே வந்த ஒருவன் பார்த்து விட்டான். அவன் பார்த்து விட்டான் என்பதை நரியும் பார்த்து விட்டது.

''ஏய், நரி இதோ இருக்கு ஓடிவா... ஓடிவா...'' என்று கூச்சலிட்டான் ஒருவன்.

அதே நேரம் நரி தலைதெறிக்க ஓடத் தொடங்கியது.

''இன்னைக்கு நீ எங்கே போனாலும் சாவு எங்கக் கையாலேதான்...'' என்று சொல்லிக் கொண்டே நரியைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள் அவர்கள்.

இன்று இவர்களிடம் உயிர் பிழைத்தால் போதும் என்ற எண்ணத்தில் எங்கே ஓடுகிறோம், எப்படி ஓடுகிறோம் என்ற சிந்தனை இல்லாது ஓடிக் கொண் டிருந்த நரி, மான்களைப் பிடிக்க தான் தோண்டிய பள்ளத்திலேயே போய் தொப்பென்று விழுந்தது.

அதே நேரம், அதைத் துரத்தி வந்த இருவரும் நரி விழுந்து கிடந்த பள்ளத்தின் முன்னே வந்து நின்றார்கள்.

எங்களுக்கு, உன்னைப் பிடிக்க அதிக அலைச்சல் வைக்காமல் இருக்க எவனோ இங்கே பள்ளத்தை வெட்டி வைத்து, மாட்டி வைத்து விட்டான்'' என்று சொல்லி சிரித்தான் ஒருவன்.

''பள்ளம் வெட்டி வைத்தவன் பல்லாண்டு வாழ்க!... இந்தா இந்தச் சுருக்கை அந்த நரியின் கழுத்தில் போட்டுத் தூக்கு மேலே'' என்றான்.

சுருக்குக் கயிறு அதன் கழுத்தை நோக்கிப் போனது... அப்போது நரி...'' தான் வெட்டிய பள்ளத் தில்தானே விழுவான்' என்பதை நமக்காகத்தான் சொல்லி இருப்பார்களோ? கெடுவான் கேடு நினைப்பான்...'' என்பதையும் நம்மைப் போல் கேடு நினைப்பவர்களுக்குத்தான் சொல்லி இருப்பார்களோ என்று தன் தவறை உணர்ந்து வருந்திக் கொண்டி ருக்கும் போது, நரியைத் தூக்கி மேலே போட்டார்கள்.

அப்போது அவ்வழியே அந்த மான்கள் இரண்டும் மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டு நடந்தன.

அவைகளைப் பார்த்த நரியின் வாயில் எச்சில் ஊறவில்லை... அதன் நாக்கு காய்ந்து கொண்டிருந்தது.

●

14. ப(ா)டம்

அந்த மூன்று பேரும் பேசிக் கொண்டே நடந்தார்கள்.

''டே, கண்ணன் தியேட்டருலே ''துர்க்கா படம் போட்டு இருக்காங்கடா. அதுல ஒரு நாயும், குரங்கும் நல்லா நடிச்சியிருக்காம். குரங்கு துப்பாக்கி எல்லாம் சுடுமாம்'' என்றான், முத்துகிருஷ்ணன்.

''ஆமாண்டா, நேத்து எங்க மாமா கூட பாத்துட்டு வந்து நல்லா இருக்குன்னு சொன்னாங்க! செமையா சண்டை கூட போடுதாம்...'' என்றான் குமார்.

''இந்த ஞாயித்துக் கிழமையும் அந்த ஓட்டவண்டி வாத்தியாரு ஸ்பெஷல் கிளாசை வச்சிட்டாரே... எப்படிப் போறது?...'' என்றான் சேகர்.

அந்த மூன்று பேரும் ஒரே வகுப்பில் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறார்கள்.

அடுத்த மாதம் ஆண்டுத் தேர்வு வருவதால் ஆங்கிலத்திற்கு மட்டும் 'ஸ்பெஷல்' கிளாஸ் வைத்திருக்கிறார் வகுப்பாசிரியர் - வரதராசன்.

அதற்குத்தான் திருப்பாலைத்துறை கிராமத்தில் இருந்து மூன்று பேரும் போய்க் கொண்டிருந்தார்கள்.

பள்ளியில் இவர்கள் போல் வகுப்பு மாணவர்களும் வந்து இருந்தார்கள்.

ஆசிரியர் மட்டும் இன்னும் வரவில்லை.

அதனால், சில மாணவர்கள் விளையாடிக் கொண்டும், சிலர் கும்பலாகப் பேசிக் கொண்டும் இருந்தார்கள்.

''டே சேகர், 'நைட், துர்க்கா படம் பார்த்தேன். செம ஜோக்குடா. நாயும், குரங்கும் செய்ற சேட்டை இருக்கே, வெகு ஜோர்.''


அதைக் கேட்டதும் மூவருக்கும் எப்படியும் அந்தப் படத்தைப்பார்க்க வேண்டும் என்ற ஆசை மேலும் அரும்பியது.

மூவரும் தனித்துப் போனார்கள்.

''டே கிருஷ்ணா, மணி பத்தே கால் ஆயிடுச்சி, இன்னும் நம்ம வாத்தியார் வல்லியே...'' என்றான், சேகர்.

''ஒரு வேளை அவருக்கு வேற வேலை ஏதாவது வந்திருக்குமோ?...'' என்றான், கிருஷ்ணன்.

''அந்த ஓட்ட வண்டி சைக்கிள் ஏதாவது ரிப்பேர் ஆகியிருக்குமோடா?... அவர் காலத்தோட எதையும் செய்வாரே. காந்தியைப் போல் அவர் காலத்தை மதிப்பவராச்சே.'' என்றான், குமார்.



''டே, இதோ பாருங்கடா, பத்தரை மணி வரைக்கும் பார்ப்போம். அவர் வர்லேன்னா நாம சினிமாவுக்குப் போயிடுவோம்'' என்றான் சேகர்.

'' போகலாம்தான். காசு வேணாமா? என்றான் குமார்.

''ஆமாம். போகலாம்தான், காசு வேணாமா?'' கேட்டான் கிருஷ்ணன்.

''சரி, உன்னுகிட்டே எவ்வளவு இருக்கும்?'' கேட்டான் சேகர்.

''மதியம் டிபன் கட்டிக் கொடுக்கல. அதனால மதியம் ஏதாவது சாப்பிடுன்னு எங்க அம்மா இரண்டு ரூபா கொடுத்திருக்காங்க.'' என்றான், கிருஷ்ணன்.

''என்னுகிட்டே ஒரு ரூபா இருக்கு'' - குமார்.

''இதோ பாருங்கடா...'' என்று ஒரு ஐம்பது ரூபா நோட்டை எடுத்துக் காட்டி,'' எனக்கு செருப்பு வாங்க எங்க அப்பாகிட்டே ஐம்பது ரூபாய் வாங்கிட்டு வந்திருக்கேன். நீங்க கவலைப்பட வேணாம் நான் டிக்கெட் எடுக்கிறேன். நாம சினிமாவுக்குப் போக லாம்'' என்றான் சேகர்.

''அது எப்படிடா, வாத்தியார் வந்துட்டா?'' பயத் தோட கேட்டான், கிருஷ்ணன்.

''வந்துட்டாப் போக வேணாம். அப்படி வர்லேன்னா போகலாமா?...'' என்றான், சேகர்.

''சரிடா...'' என்றான், குமார்.

''அப்ப நானும் சரி'' - கிருஷ்ணன்.

''சரி இப்ப மணி என்னடா?'' கேட்டான் கிருஷ்ணன்.

தன் வாட்சைப் பார்த்தபடியே, ''பத்து முப்பது இப்பப்போனா சரியா இருக்கும்...'' என்றான் சேகர்.

''சரி வாங்க, கிளாஸ் ரூமிலே இருக்கிற புத்தகப் பையை எடுத்துக்கிட்டு வந்துடலாம்'' என்றான் குமார்.

''சரிடா! வாங்க'' என்று பரபரப்போடு இயங்கி னான் சேகர்.

அவனைத் தொடர்ந்து இருவரும் சென்றார்கள்.

மூவரும் புத்தகப்பையோடு கிளம்பியதைப் பார்த்த கிளாஸ் லீடர் கண்ணன் கேட்டான் ''எங்கேடா கிளம்பிட்டீங்க?''

''முதலமைச்சர் எங்க மூணு பேரையும் பாக்கணு முன்னு வரச்சொல்லி இருக்கார். பார்க்கப் போறோம்...'' என்று கிண்டலடித்தான், சேகர்.

''போங்க... போங்க. ஆசிரியர் வந்ததும் அப் படியே சொல்றேன்...'' என்றான், கண்ணன்.

''உன்னால அதான் செய்ய முடியும். செய்துக்கோ... அவனுகிட்ட நமக்கு என்னடாப் பேச்சு. நீங்க வாங் கடா போகலாம்...'' என்று வேகமாக கிளம்பினான், சேகர்.

அவனைத் தொடர்ந்து அவர்களும் நடந்தார்கள்!

◆

மறுநாள் வகுப்பில்...

வருகைப் பதிவை எடுத்து முடித்த ஆசிரியர் வரதராசன், ''நேற்று ஸ்பெஷல் கிளாசிற்கு வராதவர் கள் எல்லாம் எழுந்திரிங்க...''

மணியும், கலையரசனும் நின்றார்கள்.

''நீ ஏன் வர்லே?...''

''தஞ்சாவூருலே இருந்து மாமா வந்து இருந் தாங்க... அதான் சார் வர்லே...'' என்றான், மணி.

''நீ ஏன் வர்லே?...''

''எங்க அம்மாவுக்கு முடியிலே. அதனால நான் ரேஷன் கடைக்குப் போயிருந்தேன், சார்...''

''சரி. உட்காருங்க... இங்கே நேத்து கிளாஸுக்கு வந்துட்டு, அப்புறம் வெளியே போன பெரிய மனிதர்கள் எல்லாம் எழுந்திரிங்க'' என்றார், ஆசிரியர்.

சேகர், குமார், கிருஷ்ணன் மூன்று பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''என்ன யாருமே இல்லியா?...'' கேட்டார் கோபமாக ஆசிரியர்.

பயத்தோடு எழுந்து நின்றான் கிருஷ்ணன் மட்டும்.

''ம்... சரி... முதலமைச்சரைப் பார்க்கப்போனவர் இன்னும் திரும்பி வர்லியா?'' என்று ஆசிரியர் கேட்டதும், 'சுருக்'கென்று இருந்தது சேகருக்கு. எதிர் பெஞ்சில் அமர்ந்து இருந்த கண்ணனை ஒரு முறை முறைத்துப் பார்த்தான்.

அதைக் கவனித்த ஆசிரியர், ''அங்கே என்னடா முறைப்பு? இரண்டு கயவாலிப் பயல்களும் எழுந்திருங்கடா'' என்று அதட்டினார், ஆசிரியர்.

குமாரும், சேகரும் எழுந்து தலைகுனிந்து நின்றார்கள்.

''உண்மையை உடனே ஒப்புக் கொண்ட கிருஷ்ணன், நீ மட்டும் உட்கார். உன்னை மன்னிக்கிறேன்.

இனி இதுபோன்ற பயல்களோட சேராதே.'' என்றார் ஆசிரியர்.

''நீங்க இரண்டு பேரும் இங்கே வாங்கடா.'' இருவரும் சென்றார்கள், அவரிடம்.

மேஜை மீது இருந்த கொம்பை எடுத்தார். ''முதலமைச்சரையா பார்க்கப் போனீங்க!... ம்... வகுப்புக்கு மட்ட மடிச்சிட்டு துர்க்கா படமாப் பாக்கப் போனீங்க?...'' இரண்டு பேரையும் அடிச்சி பின்னி விட்டார்.

''இனிமே போக மாட்டோம் சார், போக மாட்டோம் சார்.''

''உன்னோடுதான் இவனுங்க ரெண்டு பேரும் போனாங்கன்னு எனக்குத் தெரிஞ்சப்பவே, நீங்க படம் விட்டு வரும்போதே உங்கள கவனிக்க இரண்டு பேரை நான் அனுப்பியது உங்களுக்குத் தெரியா துடா...'' என்று சொல்லி சேகரை மேலும் அடித்தார்.

''இனி எப்பவும் இது மாதிரி செய்ய மாட்டேன் சார்... என்னை மன்னிச்சிடுங்க சார்...'' என்று அடி தாங்காமல் அழுது கொண்டே சொன்னான், சேகர்.

''நாளைக்கு நீங்க இரண்டு பேரும் பள்ளிக்கு வரும்போது, பெற்றோர்களை அழைச்சிட்டு வரணும். அப்படி இல்லேன்னா நீங்க பள்ளிக்கு வரவேணாம். என்ன புரியுதா?...'' என்று அதட்டலோடு கேட்டார், ஆசிரியர்.

''அப்படியே செய்கிறோம் சார்...'' என்று இருவரும் கண்களைத் துடைத்த படியே சொன்னார்கள்.

''இப்ப நீங்க ரெண்டு பேரும் மதியம் பள்ளி முடிகிறவரை வெளியிலேயே போய் முட்டிப் போடுங்க. நான் இங்கிருந்து பார்த்துக்கிட்டே இருப்பேன். போங்க உடனே வெளியே...'' என்று சொல்லி அதட்டினார், ஆசிரியர்.

இருவரும் அடி வாங்கிய உடம்பைத் தடவிக் கொண்டே முட்டிப்போட வெளியே போனார்கள்.

உண்மையை ஒப்புக் கொண்டதால் கிருஷ்ணன் தப்பித்துக் கொண்டான்.

●

15. எங்களின் தோழன்!

அருண் சொன்னான் ''ஏய் இது என்னோடது நான் தான் குளிப்பாட்டுவேன். நீ அந்தாண்ட போடா'' என்று.

''டே. மாமா இந்த நாய்க்குட்டியை நம்ம வீட்டுக்குக் கொண்டு வந்து கொடுக்கும் போது என்னா சொன்னாங்க தெரியுமா? இந்த செல்லக் குட்டி உங்க ரெண்டு பேருக்கும். இது அறிவுள்ள உயர்ஜாதி. அதனால் நல்லா வளர்க்கனுமுன்னு தான் சொன் னாங்க தெரியுமில்ல'' என்றான் கருணாகரன்.

அருணும், கருணாகரனும் கிருஷ்ணமூர்த்திக்கும் சரோஜாவிற்கும் பிறந்த இரண்டு செல்வங்கள்.

அருண் எட்டாவது படிக்கிறான். கருணாகரன் ஆறாவது படிக்கிறான். இருவரும் படிப்பில் எப்படி சுட்டியோ அப்படியே வால்தனம் பண்ணுவதிலும் சுட்டிகள்.

''ஏய் சோப்பைக் கொடுடா,'' என்றான் அருண்.

''முடியாது. நான்தான் குளிப்பாட்டுவேன்.''

''இல்ல... நான் தான் குளிப்பாட்டுவேன். இரண்டு பேரும் பேசுவதையும் கேட்டபடியே சிம்பு நாய் அமைதியாக உட்கார்ந்து இருந்தது.

''டே நான் அப்பாகிட்டே சொல்வேண்டா...

''நானும் சொல்வேன்''

இப்படி இருவரும் சப்தம் போட்டுக் கொண்டிருப்பதைக் கேட்ட அவர்களின் அப்பா படித்துக் கொண்டு இருந்த பேப்பரை மேஜை மீது வைத்து விட்டு குழாயடிக்கு வந்தார்.

''என்னப்பா இங்கே சத்தம்?''

''அப்பா... அப்பா... நான் தான் சிம்புவைக் குளிப்பாட்டுவேன்னு சொல்றேன்... அருண் விட மாட்டேங்குறான்''

''நான் தானேப்பா பெரியவன். நான்தான் குளிப்பாட்டுவேன்னு சொல்றேன். இவன் விட மாட்டேங்குறான்...''

இவர்கள் இருவரும் பேசுவதைக் கேட்டு சிரித்தபடியே ''சரி நான் சொல்றது போல கேட்கிறீங்களா? என்றார்.

''சரி, கேக்குறோம்...'' என்றார்கள்.

''நீ சிம்புக்கு முதலில் தண்ணீ ஊத்து, நீ அப்புறம் சோப்பு போடு. அப்புறம் நீ தண்ணி ஊத்து. குளிப்பாட்டி முடிஞ்சதும் நீ துவட்டி விடு... சரி தானா?''



தந்தை சொல்லியது போலவே சிம்புவைக் குளிப் பாட்டி துடைத்து விட்டார்கள். பின் சிம்புவோடு தோட்டத்தில் பந்து போட்டு விளையாடிக் கொண்டு இருந்தார்கள்.

அங்கே வந்த அவர்களின் அம்மா சரோஜா சொன்னாள். ''அருண் நீ போய் இன்ஸ்பெக்டர் மாமாவை இன்னைக்கு மதியம் நம்ம வீட்டுக்கு வரச் சொல்லிட்டு வர்றீயா?''

சரோஜாவின் தம்பிதான் இன்ஸ்பெக்டர். இவர்கள் இருக்கும் தெருக்கோடியில்தான் காவல் நிலையம். இப்படி அடிக்கடி செய்திகள் சொல்ல அழைத்து வர அருணோ, கருணாகரனோ போவதுண்டு.

அப்படி போகும் போது கண்டிப்பாக சிம்புவும் போவான்.

''அம்மா அருணோட நானும் போறேம்மா'' என்றான் கருணாகரன்.

''சரி ஓரமா போயிட்டு வாங்க கார், பஸ் அதிகமா போயிகிட்டு இருக்கு...'' என்றாள் சரோஜா.

''சரிம்மா!... சிம்பு கிளம்பு மாமாவைப் பார்த்துட்டு வருவோம்...'' என்று அருண் சொன்னதும் அவர்களுக்கு முன்னே வாலை ஆட்டியபடி ஓடியது... நாய்!

அதன் பின்னே இருவரும் தாய் சொன்னது போல் ஓரமாக சென்றார்கள்.

◆

அன்று ஞாயிற்றுக் கிழமை.

தோட்டத்தில் அருணும், கருணாகரனும் பாட்மிட்டான் ஆடிக் கொண்டு இருந்தார்கள். கோட்டிற்கு வெளியே உட்கார்ந்து அவர்கள் ஆடுவதைப் பார்த்துக் கொண்டு இருந்ததோடு அவ்வப்போது அவுட்டாகி வெளியே போய் விழும் பந்தை எடுத்து வந்து கொடுத்து கொண்டும் இருந்தது சிம்பு!

இருவரும் விளையாடி முடிந்ததும் ''சிம்பு, இங்கேவா செடிக்கெல்லாம் தண்ணீ ஊத்துவோம்'' என்று அருண் சொன்னதும், கார் செட்டின் ஓரம் இருந்த பக்கெட்டை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தது.

அருண் குழாயில் இருந்து தண்ணீர் பிடித்து பூச்செடி களுக்கு ஊற்றத் தொடங்கினான்.

சிம்பு போய் அரிவாளை எடுத்து வர, ''இந்தப் புல்லை எல்லாம் அறுக்கணும்'' என்றான் கருணா கரன்.

உடனே பக்கெட் இருந்த இடத்தில் இருந்த அரிவாளை எடுத்து வந்து கையில் கொடுத்தது.

சிம்புவின் அறிவுத்திறனை தோட்டத்திலிருந்த ஊஞ்சலில் அமர்ந்தபடியே பார்த்துக் கொண்டி ருந்தாள் சரோஜா.

அவள் நினைத்தாள். ''இந்த மனிதர்கள் தான் எதைச் சொன்னாலும் ஒழுங்காக கேட்பது இல்லை. செய்வதும் இல்லை. இவைகளுக்கு பேச்சு மட்டும் தான் இல்லை. மற்ற எந்த விதத்தில் மனிதர்களை விட இவை குறைந்து இருக்கின்றன?''

''சிம்பு இங்கே வாப்பா!'' என்று ஆசையோடு அழைத்தாள், சரோஜா.

அவர் குரலைக் கேட்டதும் தோட்டத்தில் இருந்த சிம்பு வாலை ஆட்டிக் கொண்டே அவளை நோக்கி ஓடி வந்தது.

அந்த சிம்புவை பாசத்தோடு அணைத்து அதன் தலையில் தடவி கொடுத்தாள்.

''அருண், கருணா, அப்பா வர்ற நேரமாச்சு வாங்க கோயிலுக்குப் போகனும்'' என்று அழைத்தாள்.

''மல்லிகைச் செடி மட்டும் தான் பாக்கி ஊத்திட்டு வந்துடறேன்'' என்று தண்ணீர் வாளியோடு சென்றான்.

அதே நேரம் அருணின் அப்பா வந்து சேர்ந்தார்.

காரை விட்டு இறங்கி வந்த கிருஷ்ணமூர்த்தி... ''என்ன சரோஜா இன்னும் ரெடியாகலியோ...? கோயிலுக்கு எப்படபோறது?'' என்றார்.

''வாங்க. நீங்க டிபன் சாப்பிடறதுக்குள்ள நாங்க ரெடியாகி விடுவோம்...'' என்றாள்.

பத்து நிமிடத்தில் எல்லோரும் கிளம்பி விட்டார்கள்.

கதவைப் பூட்டினாள் சரோஜா. பீச்சுக்குப் போனா உன்னை அழைச்சுக்கிட்டுப் போகலாம்.

நாங்க கோயிலுக்குப் போறதாலே உன்னை அழைச் சிட்டுப் போகல சாரீடா... என்றான் அதன் முதுகை செல்லமாகத் தடவி ''ஆமாண்டா சிம்பு, சாரிடா...'' என்றான் கருணாவும்.

''சிம்பு பத்திரமா இரு நாங்க உடனே கோயிலுக்குப் போயிட்டு வந்திடுவோம்.'' என்றாள் சரோஜா.

எல்லோரும் காரில் ஏறிக் கொண்டார்கள். கூர்க்கா கதவைத் திறந்து வைத்துவிட்டு காரின் அருகே வந்தான்.

''நாங்க திருவேற்காடு கோயிலுக்குப் போறோம். எட்டு மணிக்கெல்லாம் வந்துடுவோம். யாராவது வந்தா பேரை குறிச்சி வச்சிக்க. பாதுகாப்பா இரு...'' என்றவாறே கிருஷ்ணமூர்த்தி காரை இயக்கினார்.

மணி ஏழு இருக்கும். கிருஷ்ணமூர்த்தி வீட்டின் முன்னே வேகமாக ஒரு அம்பாசிடர் கார் ஒன்று வந்து நின்றது.

அதில் இருந்து இறங்கிய ஒருவர் கூர்க்காவிடம் வந்தார். ''சார் இருக்காங்களாப்பா?'' வந்தவர் கேட்டார். வயது நாற்பது இருக்கும் நல்ல உயரம் திடமான உடல்.

''நீங்க யார் சார்? என்ன விசயமா பார்க்கணும்? சொல்லுங்க வந்ததும் சொல்றேன்.''

''நான் உங்க ஐயாவோட பிரண்டு... எப்ப வருவாரு?''

''எட்டு மணிக்கு வாறேன்னு சொன்னாங்க,''

''அப்படியா?'' என்றவர் திரும்பி காரில் இருந்த மூன்று பேர்களிடம் சொன்னார். மூவரும் இறங்கினார் கள். அவர்களும் தடியாக உயரமாக இருந்தார்கள்.

''கூர்க்கா... நாங்க எல்லாம் சாரோட நண்பருங்க. கதவைத் திறந்து விடு உள்ளே... உட்கார்ந்து இருக் கோம். வந்ததும் பார்த்துட்டுப் போயிடறோம்.'' என்றார் நால்வரில் ஒருவர்.

''இல்ல சார் எங்கையாவது போயிட்டு அப்புறம் வாங்க'' என்றான் கூர்க்கா.

இவர்கள் பேசுவதை எல்லாம் கேட்டபடியே வாசலில் படுத்திருந்த சிம்பு செடி மறைவில் பதுங்கி பதுங்கி கேட்டை நோக்கி வந்தது.

நால்வரில் ஒருவர் மற்றவர்களைப் பார்த்து கண் சிமிட்டினான்.

''ஆமாம். நீ சொல்றதும் சரிதான். நாங்க ஹோட்டலுக்குப் போயிட்டு அப்புறம் வர்றோம். கொஞ்சம் தீப்பெட்டி கொடேன்'' என்றார்.

அதே நேரம் மூவரும் வீதியை நோட்டமிட்டார்கள்.

அது தனி பங்களாவாகவும் ஒதுக்குப் புறமாகவும் இருந்தது. வீதி விளக்கு வேறு உயிர் போவது போல், எரிந்து கொண்டு இருந்தது.

தான் கொண்டு வரும் சாப்பாட்டுக் கூடையில், இருந்து தீப்பெட்டியை எடுக்கக் கூர்க்கா குனிந்த போது ஒரே எட்டில் கழுத்தில் ஓங்கி கராத்தே வெட்டு விட ''ம்மா'' என்ற ஒலியோடு கூர்க்கா கீழே விழ, நின்றிருந்தவர்களில் ஒருவன் கூர்காவின் இடுப்பில் இருந்த சாவியை எடுத்து அவசரமாக கேட்டைத் திறந்தான்.

மற்ற இருவரும் மயங்கிய நிலையில் கிடந்த கூர்க்காவை உள்ளே தூக்கி வர ஒருவர் ஓடிச் சென்று வெளி லைட்டை அணைத்தான்.

வந்திருப்பவர்கள் நல்லவர்கள் இல்லை. கள்வர்கள் கொலைக்காரர்கள் என்று நம்பியது சிம்பு.

அவர்கள் கண்ணில் படாமல் தன் சிவந்த மேனியை மறைத்துக் கொண்டு மல்லிகைச் செடியின் அடியில் நின்றது.

அவர்கள் பூட்டை உடைப்பதில் ஈடுபட்டிருப் பதைக் கண்டதும் நான்கடி உயரமுள்ள வெளிக் கேட்டை ஒரே தாவலில் தாவி தெருவிற்கு வந்த சிம்பு புலிப்பாய்ச்சலில் ஓடத் தொடங்கியது. சிறிது நேரத்தில் சிம்பு காவல் நிலையத்தினுள் நுழைந்தது. அருண் மாமாவின் பேண்டைப் பிடித்து இழுத்து குரைத்தது.

''என்ன சிம்பு... இது? உங்க பிரண்ட்ஸ் அருணும், கருணாவும் எங்கே?'' என்றார்.

சிம்பு மீண்டும் பதட்டத்தோடு அவரின் பேண்டை இழுத்து குரைத்தது. என்றுமே இப்படி நடந்து கொள்ளாத சிம்புவின் செயல் ஏதோ விபரீதம் என்பதை உணர்த்தியது. சிம்பு முன் செல்ல இவர் அதன் பின்னாடியே சென்றார்.

வீட்டில் விளக்குகள் இல்லாததும் காவலுக்கிருக்கும் கூர்க்கா இல்லாததும் கண்ட அருண் மாமாவின் போலீஸ் மூளை வேலை செய்தது. வெளியில் ஆள் இன்றி நின்ற காரைப் பார்த்தார்.

மெல்ல உள்ளே சென்ற அருணின் மாமா ஒவ் வொரு அறையாக நோட்டமிட்டார். ஒரு அறையில் மட்டும் சிறிது வெளிச்சம். தெரிந்தது. அதுவும் டார்ச்லைட் வெளிச்சம் பழக்கமான வீடு என்பதால்... சுலபமாகவே நடந்து செல்ல முடிந்தது. அறையின் உள்ளே ''ஏய் நீ அந்தப் பணத்தை எல்லாம் சூட் கேஸில் போட்டு அடை நீ இந்த நகைகளை எல்லாம்

இதில் போட்டு அடை...'' என்ற குரல் கேட்டது. கண் இமைக்கும் நேரத்தில் அருணின் மாமா அவர்கள் இருந்த அறைக்கதவை இழுத்து மூடினார். உள்ளே இருந்து ''உயிர் மேல் ஆசையிருந்தால் உடனே கதவைத் திறந்து விடுங்கள்.'' என்றபடியே கதவை மாறி மாறி தட்டினார்கள்.

அருணின் மாமா எதுவும் பேசாமல் கதவைத் தாழ் போட்டு விட்டு பாதுகாப்புக்கு இன்னும் காவலர்கள் தேவை என்பதை உணர்ந்து ஹாலில் இருந்த போனை சுழற்றினார்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் 'தப் தப்'' வென்று துப்பாக்கி ஏந்திய பல காவலர்கள் உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் எப்படி அங்கே நடந்து கொள்ள வேண்டும் என்பதைச் சுருக்கமாகச் சொல்லி விட்டு கதவின் அருகே வந்தார்.

''நீங்க நினைப்பது போல் நாங்க யாரோ அல்ல காவலர்கள். கதவைத் திறந்ததும் ஓடவோ தாக்கவோ முற்பட்டீங்கன்னா உங்க உயிர் உங்க உடலிலே இருக்காது'' என்றவர் துப்பாக்கியை ஒரு முறை சுட்டும் காண்பித்தார். ஒரு காவலரைப் பார்த்து தாழ்ப்பாளை திறக்கச் சொன்னார்.

முதலில் வந்தவன் இன்ஸ்பெக்டரைச்சுட முற்பட ஒரு காவலர் அவன் தோளில் ஒரு குண்டைப் பாய்ச்சினார்.

''அம்மா'' என்று கையில் இருந்த துப்பாக்கியைக் கீழே போட்டான்.

மற்றவர்கள் தப்பிக்க சந்தப்பம் இல்லாமல் எல்லோர் கைகளிலும் விலங்கு மாட்டப்பட்டது.

அதே நேரம் கோவிலுக்குச் சென்று திரும்பி வந்தவர்கள் வெளியில் போலீஸ் ஜீப் நிற்பதையும் வீட்டில் விளக்கு எரிவதையும் கேட்டில் கூர்க்கா இல்லாததையும் கண்டு ஏதோ அசம்பாவிதம் நடக் கிறது என்று அவசர அவசரமாக காரை விட்டு இறங் கினார்கள்.

சிம்பு அருண் மாமாவின் பேண்டைப் பிடித்து இழுத்து குரைத்த படியே கூர்க்கா இருந்த இடத்தை நோக்கி ஓடியது.

அதன் பின்னாடி விரைந்து சென்றவர் கூர்க்காவைப் பார்த்ததும் நிலைமையை உணர்ந்து விரைவாக செயல் பட்டார். காவலர்கள் அவருக்கு வேண்டிய முதல் உதவியில் ஈடுபட்டார்கள்.

''என்ன தம்பி இதெல்லாம்? என்று பதட்டத்தோடு சரோஜா கேட்டாள்.

''எல்லாம் நம்ம சிம்பு கிட்டேதான் கேட்கணும்'' என்றார், சிரித்தவாறே.

அதற்குள் திருடர்களை காவலர்கள் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு இருந்தார்கள். ''என்ன தான் நடந்துச்சு? கிருஷ்ணமூர்த்தி கேட்டார்.

எல்லாவற்றையும் சுருக்கமாக இன்ஸ்பெக்டர் அருண் மாமா சொன்னார்.

''ஹை மைடியர் சிம்பு ''என்று அருணும், கருணாவும் அதைத் தூக்கி கொண்டார்கள். ''நீங்க ஸ்டேஷன் வரை வந்து ரிப்போர்ட்டு எழுதிக் கொடுத்திட்டு வாங்க'' என்று கிருஷ்ணமூர்த்தியிடம் இன்ஸ்பெக்டர் சொன்னார்.

அதே நேரம் இரண்டு போலீஸ்காரர்களைப் பார்த்து அந்த கூர்க்காவை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல பணித்து விட்டு ஜீப்பில் ஏறமுற்பட்டார். அப்போது அருணின் பிடியிலிருந்தும் கருணாவின் பிடியிலிருந்தும் விடுபட்டு அவரிடம் சென்று வாலை ஆட்டியபடியே சிம்பு நின்றது.

''உங்கள் உதவிக்கு மிக்க நன்றி'' என்று சிம்பு சொன்னதோ?

●

சிந்திக்கத் தெரிந்த சிங்கம்



பாபநாசம் குறள்பித்தன்